# சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 30வது கூட்டறிக்கை 2020.08.18

சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 30வது அமர்வு 2020.08.18 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ பதில் தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

**சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப்.ஏ.அச்சி முஹம்மட் | கௌரவ பதில் தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 02. ஜனாப்.ஏ.எம்.எம். நௌசாட் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 03. திரு.வீ.ஜெயச்சந்திரன் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 04. ஜனாப்.ஐ.எல்.நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 05. திருமதி.ஆர்.வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 06. திரு.என்.கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 07. ஜனாப்.ஏ.சி.முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 08. ஜனாப்.எம்.ரீ.பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. ஜனாப்.ஏ.எம்.எம்.றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 10. ஜனாப்.ஏ.எல்.எம்.ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 11. ஜனாப்.எஸ்.நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 12. ஜனாப்.ஏ.யூசுப் லெவ்வை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 13. திருமதி.கே.எம்.இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 14. திருமதி.எம்.எஸ்.சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. திருமதி.எஸ்.எம்.சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. திருமதி.கே.எல்.சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 17. ஜனாப்.வை.பீ.எம்.முஸம்மில் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

**சமூகமளிக்காத கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப்.எஸ்.எம்.எம்.முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 02. ஜனாப்.யூ.எல்.அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 03. ஜனாப்.ஐ.எல்.எம்.மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |

**சமூகமளித்த உத்தியோகத்தர்கள்**

| | |
|---|---|
| 01. ஜனாப்.எம்.ஏ.கே.முஹம்மட் | செயலாளர் |
| 02. செல்வி.ஏ.பீ.ஏ.ஸஹானா | அலுவலக உதவியாளர் |

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் (பதில் தவிசாளர்) அவர்கள்:**
பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் 04வது சபையின் 30வது அமர்வுக்கு வரவேற்றவனாக,

கௌரவ உறுப்பினர் முஸ்தபா, கௌரவ உறுப்பினர் அஸ்பர், கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள் இன்றைய சபை அமர்விற்கு வருகை தர முடியாதென்று அறிவித்தல் விடுத்திருக்கின்றார்கள். அவர்களுக்கு விடுமுறை வழங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ பதில் தவிசாளர் | ஏ.அச்சி முஹம்மட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

இவ் அமர்வின் முதல் அம்சமாக கடந்த கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். இக் கூட்டறிக்கையில் ஏதாவது திருத்தங்கள் இல்லாவிடில் ஒருவர் ஆமோதிக்கலாம்.

**தீர்மானம் - 04/30/01**

சென்ற மாதக் கூட்டறிக்கை கௌரவ பதில் தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ பதில் தவிசாளர் | ஏ.அச்சி முஹம்மட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

கூட்டறிக்கை சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ பதில் தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**

இச் சபையில், இவ் அமர்வில், இவ் இடத்தில் நான் அமர்ந்திருந்து இக் கூட்டத்திற்கு தலமை தாங்குவதற்கு முதற்கண் இறைவனுக்கும் அடுத்ததாக இச் சபையின் கௌரவ முன்னாள் தவிசாளர் அவர்கள் அவரின் தனிப்பட்ட எண்ணத்தின் காரணமாக இராஜினாமா செய்ததை முன்னிட்டுதான் நான் இன்று இச் சபையில் அமர்ந்திருக்கின்றேன். எதிரே வருகின்ற அடுத்த அமர்வில் யாரை தெரிவு செய்தாலும் நாங்கள் எங்களுக்கு என்று எங்கள் பணிகளை தொடர வேண்டும். இச் சபையை பொருத்தவரையில் இச் சபையின் அங்கீகாரத்துடன்தான் சபையின் ஏனைய ஊழியர்களும், ஊரின் நிர்வாகங்களும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. எனவே நாங்கள் இதை தொடர வேண்டும். ஒவ்வொருவரும் இப் பதவியில் இருந்து போகலாம் அல்லது வேறு உயர் பதவி பெற்றுச் செல்லலாம். ஆனால் நாம் எங்கள் பணியை ஒருவர் இல்லை என்று இடைநிறுத்தி வைக்காமல் தொடர்ந்து அப் பணி நடக்க வேண்டும். ஊரின் மேலான சபை என்பதால் இப் பணி தொடர வேண்டும் என்று நான் சபையில் இருக்கின்ற அனைவரிடமும் விணயமாக வேண்டியவனாக,

தற்போது நாட்டில் சென்ற கூட்டத்திற்கும் இக் கூட்டத்திற்கும் இடைப்பட்ட ஒரு காலத்தில் தேர்தல் நடைபெற்று அதில் புதிய அரசாங்கம் ஒன்று தெரிவாகி, பிரதமர் உட்பட பல அமைச்சர்களும் தற்போது நாட்டில் தெரிவாகி உள்ளார்கள். 2/3 பெரும்பான்மை கொண்ட அரசாங்கம் அமைந்திருப்பதால் அரச சார்பு உடையவர்கள் எங்களது மேலான சபையிலும் இருப்பதால் எங்களது எதிர்கால பணியை இந்த அரசாங்கத்தின் ஒத்துழைப்போடு செவ்வனே கொண்டு செல்வதற்கு அனைவரும் நாமும் இச் சபையிலே இருக்கின்றவர்களின் ஒத்துழைப்போடு எமக்கு தேவையான எமது ஊருக்கு தேவையான அதிகமான விடயங்களை முன் கொண்டு செல்ல வேண்டி இருப்பதனால் எங்களுக்குள் கட்சி பேதம் இருக்கலாம். ஒவ்வொருவருக்கும் மாற்றுக் கருத்துக்கள் இருக்கலாம். நாம் அவற்றை கவனத்தில் எடுக்காமல் சம்மாந்துறையின் உயர் சபை என்ற படியால் இச் சபைக்குள் நாங்கள் ஒரு தாயின் வயிற்றில் பிறந்த பிள்ளைகள் போல் கருத்தொற்றுமையோடு எதிர்கால நடவடிக்கைகளை முன்கொண்டு செல்ல வேண்டும். இதுதான் எமக்கு சிறப்பு.

இன்றைக்கு பெரும்பான்மையான சமூகம் ஒன்றுபட்டு இந் நாட்டின் முன்னேற்றத்தை கொண்டு வர வேண்டும் என்ற கடப்பாட்டின் அமைவாகத்தான் 2/3 பெரும்பான்மை ஆட்சி அமைந்திருக்கின்றது. அதே போல் எமது ஊரிலும் ஒற்றுமையோடு செயற்பட்டு எந்த ஒரு திட்டத்தை கொண்டுவந்தாலும் ஒற்றுமை என்ற பலத்தால்தான் வெற்றி அடையலாம். இதுதான் நான் கண்ட வரலாறு. எனவே நாங்கள் இதை முன் கொண்டு செல்ல வேண்டும். கடந்த காலங்களில் இச் சபையில் பல திட்டங்களை முன்வைத்திருக்கின்றோம். அதில் சில திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கின்றது. சில திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படாமல் இருக்கின்றது. அதற்கு பல காரணங்கள் இருக்கலாம். நாம் அந்தக் காரணத்தை எல்லாம் தேடி குறைகளை எல்லாம் கண்டுபிடித்து விவாதித்து கொண்டிருப்பதற்கு இது உகந்த தருணம் இல்லை. இன்றைய கூட்டத்திற்கு நான் சமூகமளிக்க முடியாமல் இருந்திருந்தால் இந்த சபையில் இருக்கின்ற உங்களில் யாராவது ஒருவர் இக் கூட்டத்தை நடத்தலாம். அந்த அந்தஸ்த்து சகல உறுப்பினர்களுக்கும் இருக்கின்றது என்ற உணர்வோடு, அவ் உணர்வை மதித்தவனாக நான் சில விடயங்களை இச் சந்தர்ப்பத்தில் உங்கள் முன் சமர்ப்பிக்க இருக்கின்றேன்.

எனது கருத்துக்களை இச் சந்தர்ப்பத்தில் ஒரு சில நிமிடம் நான் கூற வேண்டி இருப்பதனால் நீங்கள் எல்லோரும் செவிமடுக்க வேண்டும் என்று விணயமாக வேண்டி எமது வேலைகளில் தடங்கள் ஏற்படுவதற்கு சில காரணங்கள் இருப்பதனால் எனக்கு கிடைத்த இச் சந்தர்ப்பத்தில் எமது 10 வட்டாரங்களுக்கும் 10 கோவைகள் அமைத்து எதிர்கால நடவடிக்கைகளை அந்த கோவைகளின் ஊடாக நடைமுறைப்படுத்தினால் எமது அதிகாரப் பரவலாக்கமும், அதிகார மட்டத்தில் வேலைகள் நடைபெற்றனவா என்று அறியக்கூடிய வாய்ப்பும் வரும். உதாரணமாக மின் விளக்கை எடுத்துக் கொண்டால் வட்டாரக் கோவையில் மின் விளக்கு சம்பந்தமான தேவைகள் நிறைவேற்றப்பட்டிருந்தால் அந்த வட்டாரத்தில் மின் விளக்கு விடயம் முடிந்து விட்டது என்று நாம் அறியக்கூடியதாக இருக்கும். அதே போல் வடிகான்கள் ஏனைய வேலைகள் செய்வது என்றால் அதற்கு முன்னுரிமை கொடுத்து வட்டார செயற்பாடுகளை முன் கொண்டு செல்லலாம் என்று நான் எனது இச் சந்தர்ப்பத்தில் உங்களிடம் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நாம் இங்கு நடைபெறுகின்ற விடயங்களை நாங்கள் எங்களுக்குள் எடுத்து எங்களது செயலாளர் அவர்களுக்கு அறிவிக்கின்றோம். செயலாளர் அவர்கள் நடைமுறைப்படுத்துகின்ற போதும் பல பிரச்சினைகளை எதிர்நோக்கலாம். அதனை நடைமுறைப்படுத்துகின்ற LGA, TO, FA, WS போன்றவர்கள் அதை நடைமுறைப்படுத்தலாம். அவர்களுக்கு இடை இடையே வருகின்ற சிக்கல்களில் தடங்கள் ஏற்படலாம். ஆனால் என்னைப் பொருத்தவரையில் இந்த சபையில் இந்தக் கூட்டத்திற்கு அவர்களும் சமூகமளித்திருக்க வேண்டும். அவ்வாறு அவர்கள் இருந்தால்தான் நாம் எடுக்கின்ற தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் அவர்களுக்கும் ஒரு கருசணை ஏற்படும் என்பது எனது தனிப்பட்ட அபிப்பிராயம். அதுமட்டுமல்லாமல் நாங்கள் வழக்கமாக இந்த சபை முடிந்தவுடன் அடுத்த சபையில் சந்திப்பவர்களாக இருக்கக்கூடாது. நாங்கள் சபை முடிந்ததும் அடுத்து ஓர் வாரத்தில் தங்களுக்கிடையில் ஏதோ ஒரு ஒற்றுமையோடு ஒன்றுகூடலையும் ஏற்படுத்த வேண்டும். இது நான் உங்கள் முன் வைக்கின்ற தீர்மானங்களில் ஒன்று. நான் நினைத்துக் கொண்டிருக்கின்ற தீர்மானங்களை உங்கள் முன் சமர்ப்பித்து நீங்கள் ஏகமனதாக அங்கீகரிப்பீர்கள் என்ற என்னத்துடன் கூறுகின்றேன்.

எமது இந்த சபையை பொருத்தவரையில் நமது தேவைகளை 20 பகுதிகளாக பிரித்து நாங்கள் முன் நின்று அதிகார பராவலாக்கல் என்ற அந்த அமைப்பின் ஊடாக ஒவ்வொருவரும் இனிமேல் இதற்கு பின்னர் எந்தவொரு தவிசாளர் தெரிவு செய்யப்பட்டாலும் நாங்களும் இருக்கின்ற இந்த குறித்த காலத்ததுக்குள் நாம் பங்காளிகளாக இருக்க வேண்டும். நான் ஒரு மூன்றாவது மூத்தவன் என்ற வகையில் நீங்கள் அனைவரும் இளையவர்கள். இன்னும் இருக்கின்ற மாதங்களின் பிற்பாடு அடுத்த முறையும் ஒரு தேர்தல் வருகின்ற போது நீங்கள் செய்கின்ற வேலைகள், எடுத்திருக்கின்ற நடவடிக்கைகள் மக்கள் முன் வெளிச்சத்திற்கு வந்து நீங்கள்தான் ஒவ்வொரு வேலைகள் செய்வதாக மக்கள் உணர வேண்டும் என்பதற்காக சில நடவடிக்கைகளை நான் 20 பிரிவுகளாக பிரித்து உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன். முதலாவதாக திண்மக் கழிவு என்கின்ற ஒரு விடயத்தை ஒருவரிடம் நாங்கள் ஒப்படைத்து ஏனையோர்களும் அவர்களுக்கு உதவியாக இருத்தல். அடுத்ததாக வடிகான் துப்பரவு என்பதை ஒருவரிடம் ஒப்படைத்து அதையும் அவர் முன்னிலையில் பக்க உதவியாக இருத்தல்.

வீதி விளக்குகள், நூலகங்கள் அபிவிருத்தி செய்தல், சந்தை பராமரிப்பு, நடைபாதை வியாபாரம் ஒழுங்குபடுத்தல், நகர அலங்காரம், சிறுவர் பூங்காக்கள், என்பவற்றை ஒவ்வொருவரிடம் ஒப்படைத்தல். கட்டிட அனுமதி, அதில் ஏற்படுகின்ற இடர்களை நாங்கள் ஒருவரிடம் ஒப்படைத்தால் அவரும் இருக்கின்ற தவிசாளருக்கு ஒத்துழைப்பு வழங்கினால் அவ் வேலைகளை நடைமுறைப்படுத்துவதற்கு இலகுவாக இருக்கும். நான் ஏன் கூறுகின்றேன் என்றால் இப்படியான விடயங்கள் ஓரிடத்தில் சேர்ந்து இருப்பதால் அந்த விடயங்கள் யாராக இருந்தாலும் அதை நிறைவேற்றுவது கடினமாக இருக்கும் என்பதுதான் எனது தனிப்பட்ட அபிப்பிராயம். நானும் 06 வருடங்கள் உங்களைப் போல் ஒரு உறுப்பினராக இருந்து கண்ட அனுபவத்தின் ஊடாக உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன். சனசமூக நிலையங்கள் பராமரித்தல், கொள்களத்தினையும், சேதனப் பசளை தயாரிக்கும் நிலையத்தை ஒருவரிடமும், வீதி அபிவிருத்தி, Media, Facebook அதை ஒருவரிடமும், அதுமட்டுமல்லாமல் டிஜிட்டல் விளம்பரம் ஒன்று நாங்கள் பொருத்தி இருக்கின்றோம்.

அதில் நாம் ஒவ்வொரு விடயங்களையும் மக்களிடம் இலகுவாக பார்வையிடுவதற்கும், அவர்கள் அதில் இருக்கின்ற குறைபாடுகளை எங்களிடம் கூறுவதற்கும் அதை ஒருவரிடம் ஒப்படைக்க வேண்டும். பாலர் பாடசாலைகள், சுற்றுப்புற சூழல், நீர் இணைப்பு, மின் இணைப்பு என்பவற்றை ஒருவரிடமும், விளையாட்டு மைதானங்கள் இருக்கின்றது அதை ஒருவரிடமும் இந்த ஆட்சி அமைந்திருக்கின்ற இக் கால கட்டத்தில் இந்தப் பிரதேசத்தில் நாம் இருப்பவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து அதையும் நாங்கள் ஒரு தரமான விளையாட்டு மைதானங்களாக உருவாக்க வேண்டும் என்றும் அதற்கு ஒருவரை நியமித்தால் அவருக்கு நாம் வழங்குகின்ற ஒத்துழைப்போடு அதை முன் கொண்டு செல்லலாம் என்று நினைக்கின்றேன். மையவாடி, மயானங்கள் போன்றவற்றுக்கும் ஒருவரை நியமிக்க வேண்டும். எமது ஊர் 51 கிராம சேவகர் பிரிவைக் கொண்ட ஊர் ஆகும். இதில் இருக்கின்ற மையவாடிகள் எப்படி பராமரிக்கப்படுகின்றது, இரவு நேரங்களில் என்ன நடைபெறுகின்றது என்பதை அவர் ஊடாக தெரிந்து கொள்ளலாம். கௌரவ முன்னாள் தவிசாளர் அவர்கள் அடிக்கடி கூறுவார்கள் மஹல்லா மையவாடியில் ஒரு சனசமூக நிலையம் அமைத்து ஒரு அமைதிப் பூங்காவாக மாற்ற வேண்டும் என்று, அதற்கு நாம் ஒருவரை நியமித்து அதன்படி இயங்க வேண்டும்.

சௌபாக்கியா வேலைத்திட்டம் தற்போது நடைமுறையில் இருக்கின்றது. அதற்கும் ஒருவரை நியமித்து எங்களது வேலைகளை முன்கொண்டு செல்ல வேண்டும். 20 பிரிவுகளாக உள்ளடக்கி நான் சமர்ப்பித்திருக்கின்றேன். இதில் ஒவ்வொருவரும் முன்வந்து இவ் விடயத்தை நான் செய்கின்றேன் என்பவர்களை உள்வாங்கிக் கொண்டு மற்றவர்களையும் திறமைக்கேற்ப எல்லோரும் ஒன்றிணைந்து பகிர்ந்தோமானால் எதிர்காலத்தில் யார் தவிசாளராக வந்தாலும் அதிகாரப் பரவாக்கலுடன் இந்த ஊர் இருக்கின்ற காலத்தில் நாங்கள் எமது வேலைகளை முன்னெடுத்து செல்லலாம். ஒவ்வொரு வட்டாரத்திற்கும் கொண்டு வருகின்ற 10 கோவைகள் என்பதில் ஒரு வட்டாரத்தில் வேலை நடைபெறுகின்றது என்றால் நிச்சயமாக அவ் வேலை நடைபெறுகின்ற இடத்தில் அவ் வட்டாரத்தில் இருக்கின்ற உரிய உறுப்பினருக்கு தெரிய வேண்டும். அவர் எந்த பிற வேலைகள் இருந்தாலும் அதை வைத்து விட்டு அன்றைக்கு தான் செய்கின்ற வேலை மாதிரி அவ் வட்டாரத்திற்குள் அவர் காட்டிக்கொள்ள வேண்டும். அரசியலுக்கு ஒரு விளம்பரம் தேவை என்ற மாதிரி தாங்கள் என்ன செய்தோம் என்று ஏனையவர்கள் கேள்வி கேட்காமல் நாங்கள் அதை செய்ய வேண்டும்.

இன்னும் பல விடயங்கள் இருக்கின்றது. தொடர்ந்து நானே எல்லா விடயத்தையும் பேசிக்கொண்டு இருக்காமல் உங்களுக்கும் வாய்ப்பளிக்க வேண்டும் என்ற காரணத்தினால் நான் தற்போது கூறிய இவ் விடயங்களை நன்றாக செவிமடுத்து கேட்டுக் கொண்டிருந்த உங்களுக்கு உங்கள் உள்ளத்தில் இருந்து தான் எதையும் செய்ய வேண்டும் என்று உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் நாங்கள் நினைக்கின்ற மாதிரி இல்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஊரை ஆழக்கூடிய தகுதி பெற்றவர்கள். இவர்களிடம் நாங்கள் நேரடியாக பொறுப்புகளை ஒப்படைத்து அறியாசனத்தில் அமர்ந்திருக்கின்ற எதிரே வருகின்ற காலத்தில் இருக்கின்ற தவிசாளர் கேள்வி கேட்பவர்களாகவும், நாங்கள் மக்களிடம் சென்று சேவகனாக வேலை செய்பவர்களாகவும், மக்களிடம் மீண்டும் முகங்கொடுக்க வேண்டியவர்களாகவும் இருக்க வேண்டும். இச் சபையில் மிகவும் வயது குறைந்தவர் கௌரவ உறுப்பினர் சஹீல் அவர்கள், இவர்கள் மிகவும் துடிப்புடன் இந்த வேலைகளை செய்து கொண்டு செல்ல வேண்டியவர்கள். எனது 6 வருட காலம் மற்றும் இந்த 2 ½ வருட அனுபவத்தை கூட வைத்து கூற முடியும். சகலரிடமும் பல வகையான பல்வேறுபட்ட ஆளுமையும் திறமைகளும் இருக்கின்றது. எனவே நாங்கள் இன்றைக்கு அமைக்கின்ற இவ் விடயங்கள் எதிர்காலத்தில் வருகின்ற எந்த தவிசாளராக இருந்தாலும் இந்த அமைப்பில் சென்றடைய வேண்டும் என்று உங்கள் எல்லோரினதும் ஏகமனதான தீர்மானத்தை வேண்டியவனாக, உங்களது கருத்துக்களையும் வெளிப்படுத்துமாறு வேண்டிக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் வீ.ஜெயச்சந்திரன் அவர்கள்:**

கௌரவ பதில் தவிசாளர் அவர்களே, நான் ஏறக்குறைய 05 மாதங்களின் பின்னர் இன்று சபை அமர்வுக்கு வருகை தந்திருக்கின்றேன். ஆகவே கடந்த காலங்களில் நடைபெற்ற விடயங்கள் பற்றி எனக்கு தெரியாது. இருந்தாலும் கடந்த கால அரசியலை அடிப்படையாக வைத்து இன்றைய

அமர்வில் ஒரு மாற்றத்தை கண்டிருக்கின்றோம். உங்களுக்கு கிடைத்த சந்தர்ப்பம் எமது சபையில் இருக்கின்ற ஒவ்வொருவருக்கும் கிடைக்க வேண்டும் என்பது எனது எதிர்பார்ப்பு, அந்த அடிப்படையிலே கடந்த காலங்களில் எமது சபை சிறப்பாக செயற்பட்டு வந்து கொண்டிருந்தது. அதன் பரிணாமம் அடுத்த கட்டமாக இன்று நீங்கள் அமர்விலே பல நல்ல கருத்துக்களை தெரிவித்திருக்கின்றீர்கள். உண்மையிலே அன்று முதல் இன்று வரை நாங்கள் தெரிவித்து வரும் விடயம் சபையின் கௌரவ தவிசாளர் ஜனாதிபதி என்றால் உறுப்பினர்கள் அமைச்சர்கள், வட்டாரத்தின் பிரதிநிதிகள் அப் பிரதிநிதிகளிடம் ஒவ்வொரு வேலைகளை ஒப்படைத்து அதனை மேற்பார்வை செய்ய உத்தியோகத்தர்களுடன் இணைந்து அதை நடைமுறைப்படுத்துவதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும் பட்சத்தில் அந்த வட்டார பிரதிநிதிக்கும் ஒரு கௌரவம் ஒரு அங்கீகாரம் கிடைக்கும் என்று நாங்கள் வேண்டி இருந்தோம்.

கடந்த காலங்களில் வேலை செய்த உறுப்பினர்கள் வேலை செய்பவர்களாக இருந்தார்கள். நிதிகளை கொண்டு கடமையாற்றினார்கள். நிதி கொண்டு வரமுடியாதவர்கள் அல்லது தொடர்புகள் அற்றவர்கள் எங்களது வட்டாரத்துக்குள் ஒரு பிரதிநிதி என்ற அடிப்படையிலே இருந்து கொண்டிருந்தார்கள். அவர்களுக்கான சந்தர்ப்பங்கள் மிகக் குறைவாகவே இருக்கின்றது. அந்த அடிப்படையிலே நீங்கள் தற்போது தெரிவித்த கருத்தின் அடிப்படையிலே அதிகாரங்கள் நிச்சயமாக பகிரப்படும் சந்தர்ப்பத்தில் திறமையை காட்ட ஒவ்வொரு பிரதிநிதிக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும். அதே சந்தர்ப்பத்தில் அவ்வாறு சந்தர்ப்பம் வழங்கப்படும் பிரதிநிதிகள் தாங்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை துஸ்பிரயோகம் செய்து தவிசாளரின் பெயரையோ, இந்த சபையின் பெயரையோ பழுதாக்காமல் பேணிப்பாதுகாக்க வேண்டியது ஒவ்வொரு உறுப்பினர்களினதும் பொறுப்பாக இருக்க வேண்டும். எனவே அவ்வாறு எவராவது ஒருவர் தவறு செய்யும் பட்சத்தில் அது ஒட்டுமொத்த சபைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே அதில் மிக அவதானமாக இருக்க வேண்டும்.

நாம் அன்று முதல் இன்று வரை கூறுவது, நான் 1992, 1993 ஆம் காலப்பகுதியிலே சம்மாந்துறை அமீர் அலி நூலகத்தில் ஒரு அங்கத்தவராக இருந்திருக்கின்றேன். அந்த காலகட்டத்திலே எனக்கு தேவையான புத்தகங்களை நான் எடுத்து படித்திருக்கின்றேன். அந்த நூலகத்தில் அதற்கான ஊழியர் அதிகாலையில் வந்து துப்பரவு செய்து, பூஞ்செடிகளுக்கு நீர் ஊற்றி விட்டு அதனை நிறைவு செய்வார். அதன் பின்னர் வரும் KKS அதன் உள்ளக பகுதியை துப்பரவு செய்து மேசைகளை துடைத்து வைப்பார். அதன் பின்னர் நூலக உதவியாளர் வருவார். அவர் நூலகத்திற்கு தேவையான புத்தகங்களையோ, பத்திரிகைகளையோ பெற்றுக் கொடுப்பார். நூலகர் வந்து அதனை நடாத்தி முடிப்பார். 12 மணிக்கு மதிய போசனத்திற்கு செல்வார்கள். அதே போன்று மாலை வேளைகளில் மீண்டும் கடமையை செய்வார்கள். 4.30 மணிக்கு நூலகத்தை மூடுவார்கள். ஏறக்குறைய 10, 20 வருடங்களாக இதுதான் நடைமுறை. இதில் 2, 3 தடவைகள் சீரமைத்து இருக்கின்றோம், வேலைகள் செய்திருக்கின்றோம். ஆனால் அதற்கு மேலதிகமாக அதிலே சில மாற்றங்கள் வர வேண்டும் என்பது எனது அபிப்பிராயம்.

உதாரணமாக அன்று இருந்த முன்மதில் இன்று வரை அதே நிலமையில் தான் இருக்கின்றது. அந்த மதில் சுவரை உடைத்து அதை பூசி உயர்த்த வேண்டும். அதற்கான நிதி சபையில் இல்லாவிட்டாலும் நாம் அதனை ஒரு பிரதிநிதியிடம் ஒப்படைக்கும் பட்சத்தில் அப் பிரதிநிதி அந்த நிதியை சபையில் இருந்து ஒரு பகுதியையும், ஊர் பிரமுகர்களிடம் இருந்தும், நூலகத்திற்கு வந்து செல்வோரிடம் இருந்தும் பெற்று அந்த நூலகத்தின் மதிலை சீர்செய்து அதில் ஒரு மாற்றத்தை, ஒரு கவர்ச்சியை ஏற்படுத்தலாம். அது மாத்திரமல்ல புதிய திட்டங்களை அவர் அதற்குள் செலுத்தலாம். இது இரண்டு வகை அரசு, அரசாங்கம். அதிகாரிகள் அரசு, அரசாங்கம் என்ற அடிப்படையிலே நாம் இருக்கின்றோம். எனவே அவர்களின் அதிகாரத்தை நாங்கள் இடையூராக இருக்காது நாங்கள் அதனோடு இணைந்ததாக சேவைகளை செய்யும் பட்சத்தில் இந்த வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதில் சிரமமாக இருக்காது என நான் கருதுகின்றேன். விசேடமாக நீங்கள் கூறினீர்கள் 10 வட்டாரத்திற்கும் 10 கோவைகள் என்று, நான் அதனையும் வரவேற்கின்றேன். உண்மையிலே ஒவ்வொரு வட்டாரத்திற்கும் வட்டாரத்தின் பிரச்சினைகள் தொடர்பாக கோவைகள் இருக்கும் பட்சத்தில் எங்களது கோவைகளை, முன்மொழிவுகளை

மக்களின் முன் மொழிவாக இட வேண்டும். எதிர்காலத்தில் இருக்கின்ற தவிசாளர் அந்த கோவைகளின் பிரச்சினைகளுக்கு எந்த வட்டாரத்தில் அதிக பிரச்சினைகள் இருக்கின்றதோ அதனை கட்டம் கட்டமாக முடித்து வர வேண்டும். அவ்வாறு எப்போது நிறைவு செய்யப்படுகின்றதோ அன்று இந்த சபையின் அந்த வட்டாரத்திற்கான சேவை முழுமையாக நடைபெற்றிருக்கின்றது என்ற கணிப்புக்கு வரலாம். மேலும் அதற்கு ஒரு புள்ளியை இட்டு எமது உறுப்பினர்களை வளப்படுத்தலாம், உற்சாகப்படுத்தலாம். எனவே, இவ்வாறான செயற்பாடுகளை எதிர்வரும் காலங்களிலே முறையாக நீங்கள் பிரித்து பகுத்துக் கொடுக்கப்படும் பட்சத்தில் உண்மையிலே இந்த இலக்கு மிகவும் வெற்றிகரமான இலக்காக இருக்கும். 20 உறுப்பினர்களும் அவர்களது வட்டாரத்தில் அல்லது மக்கள் மத்தியில் அவர்கள் ஒரு அடையாளப்படுத்தப்படுவார்கள் என்பது எனது கருத்து ஆகும்.

இன்று காலையில் எனக்கு ஒரு சம்பவம் இடம்பெற்றது. அதாவது இவ் இடத்தில் வரும் போது வெப்பத்தை பரிசோதிக்கும் ஊழியர் என்னிடம் நீங்கள் யார்? உங்களது பெயர் என்ன என்று கேட்டார். அதற்கு நான் எனது பெயர் வீ.ஜெயச்சந்திரன், நான் வளத்தாப்பிட்டி பிரதிநிதி என்று கூறினேன். உண்மையிலே ஊழியர்களுக்கு தெரியாது. எனவே கௌரவ தவிசாளர், கௌரவ உப தவிசாளர், கௌரவ உறுப்பினர்களின் பெயர்களை, படங்களை இட்டு உத்தியோகத்தர்கள் அன்றாடம் அதை பார்த்து எங்களை பதித்துக் கொள்ள ஒரு சந்தர்ப்பமாக இருக்கும் என்று பதில் தவிசாளர் அவர்களை கேட்டுக் கொள்கின்றேன். செயலாளர் அவர்களும் இதை ஒழுங்குபடுத்த வேண்டும். எனவே ஒவ்வொரு மாற்றங்களின் போதும் ஏதோ ஒரு வித்தியாசமான மாற்றம் ஏற்படும். அதற்கான சந்தர்ப்பமாக பதில் தவிசாளர் அவர்களை கேட்டுக் கொள்கின்றேன். நீங்கள் இன்று ஏற்படுத்தப்போகின்ற மாற்றம் எதிர்வரும் காலங்களிலே எங்கள் அனைவருக்கும் ஒரு நல்லதொரு எதிர்காலத்தை ஏற்படுத்தக்கூடிய சந்தர்ப்பமாக அமைய வேண்டும். அந்த தீர்மானங்களின் போது எந்த வகையிலும் உத்தியோகத்தர்களுக்கும், உறுப்பினர்களுக்கும் ஒரு முறுகல் ஏற்படா வண்ணம் இதை நகர்த்திச் செல்லப்பட வேண்டும். அதிலே நாம் அவதானமாக இருக்க வேண்டும்.

நீங்கள் கூறிய விடயம், எதிர்வரும் காலங்களிலே சபை அமர்வுகளுக்கு உள்ளூராட்சி உதவியாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், நிதி உதவியாளர் அவர்களையும் அழைப்பதாக கூறினீர்கள். அதுவும் நல்ல விடயம். ஏனெனில் செயலாளர் கூட்டத்தின் குறிப்பை எடுத்துக் கொண்டு அவர் அதனை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்கின்ற சந்தர்ப்பத்தில் இங்கு எடுக்கப்படுகின்ற ஒரு சில தீர்மானங்கள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கோ அல்லது உள்ளூராட்சி உதவியாளருக்கோ அல்லது நிதி உதவியாளருக்கோ சரியாக சென்றடையாத பட்சத்தில் அவ் வேலை தாமதமாகின்றது. இதனால் இந்த இடத்தில் தவிசாளர் இக் கடமையை சரியாக செய்யவில்லை என்ற கணிப்பும், செயலாளர் சரியாக செய்யவில்லை என்ற கணிப்புமே எம் மத்தியில் எழுகின்றது. ஆகவே இது மாற்றியமைக்கப்பட வேண்டும். அது மாற்றியமைக்கப்பட வேண்டுமானால் இவர்கள் இவ்விடத்தில் இருப்பது சிறப்பாக இருக்கும் என நான் கருதுகின்றேன். அவர்கள் இருந்தால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கின்றது சபையால் இதற்கான செயற்பாட்டினை நாம் செய்ய வேண்டும் என்ற பொறுப்புக்கு அவர்கள் ஆளாகுவார்கள். எனவே அதுவும் ஒரு அத்தியவசிய தேவையாக இருக்கின்றது. உண்மையாகவே Act இல் அல்லது எங்களது சபை யாப்பில் இல்லாவிட்டாலும் இந்த சபையில் அதை ஒரு தீர்மானமாக எடுத்து எதிர்வரும் அமர்வுகளில் அவர்களை உள்வாங்குவது சிறப்பாக இருக்கும் என நான் கருதுகின்றேன்.

அடுத்து இந்தக் கூட்டத்திற்கு வந்து சென்றுவிட்டால் அடுத்த கூட்டத்திற்கு நாங்கள் வந்து விருந்தாளிகள் போல் கதைத்து தீர்மானங்களை எடுத்துவிட்டு செல்வதைவிட எடுக்கப்பட்ட தீர்மானங்கள் சம்மந்தமாக சபை அமர்வு அல்லாமல் ஒரு சில விசேட ஒன்றுகூடல்களை உங்கள் மத்தியில் எடுத்து அக் கூட்டத்திற்கு கௌரவ செயலாளர் அதிகாரிகளையும் எடுத்து என்ன செயற்படுத்தப்படுகின்றது என்று, எங்களை தெளிவுபடுத்தினால் நாங்களும் அதன் ஒரு பங்காளிகளாக, ஒரு அங்கத்தவர்களாக ஆழக் கூடிய சந்தர்ப்பம் இருக்கின்றது. எனவே எமது சம்மாந்துறை சபை சரியான முறையில் வழிநடாத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதுவரை காலமும் சரியான முறையிலே நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. அதிலே எந்த மாற்றமும்

இல்லை. அதனை நாம் அனைவரும் ஏற்றுக் கொள்கின்றோம். இருந்தாலும் எதிர்வரும் காலங்களிலே இன்னும் இவ் வேலைத்திட்டங்கள் விரிவுபடுத்தும் பட்சத்தில் எமக்கான சந்தர்ப்பங்கள் அதிகமாக எமது பிரதேசங்களின் தேவைகள், வளங்கள், சேவைகள் சிறப்பாக இடம்பெற வேண்டும் என்பது எனது கருத்து ஆகும்.

ஒரு வேலையை ஒருவரிடம் ஒப்படைக்கும் போது பதில் தவிசாளரிடம் கேட்டுக் கொள்வது, இங்கே இருக்கின்ற ஒவ்வொருவருக்கும் ஒரு நேர்மை இருக்கின்றது. அந்த நேர்மையை எவரும் சந்தேகக் கண் கொண்டு பார்க்காமல், அவருக்கு சந்தர்ப்பத்தை கொடுக்க வேண்டும். அந்த சந்தர்ப்பத்தை அவர் சரியாக பயன்படுத்தினாரானால் அவரை நாங்கள் அவ் இடத்தில் வைக்கலாம். அவ்வாறு இல்லாத பட்சத்தில் யாராவது தவறு செய்தால், யாராவது தனது வீட்டுக்கு மின்குமிழினை முதலாவது போட்டால் அவரை நாங்கள் எங்களது அடுத்த கூட்டத்தில் தெளிவுபடுத்தி இந்த கடமையை செய்வதற்கு சரியானவராக எங்களுக்கு தெரியவில்லை. எனவே அதனை மாற்றம் செய்து இன்னொருவருக்கு வழங்குவதுதான் சிறந்தது. அந்த அடிப்படையிலே இங்கு இருக்கின்ற அனைத்து கௌரவ உறுப்பினர்களிலும் நான் நேர்மையை காண்கின்றேன். அனைவரும் ஒரு நேர்மையோடு இருக்கின்றார்கள். ஒரு சில தனிப்பட்ட பிரச்சினைகள் இருக்கலாம். அதற்கு சபையால் தீர்வு வழங்க முடியாது. ஆனால் சபையைப் பொறுத்தவரையில் மக்களுக்கான சேவையை பொறுத்தவரையில் ஒவ்வொருவரும் தனது வட்டாரத்திற்கு எதையாவது செய்துவிட வேண்டும். தனது பெயர்களை பதிக்க வேண்டும் என்று செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். நீங்கள் எடுக்கின்ற தீர்மானங்கள் நீங்கள் செயற்படுத்துகின்ற, எதிர்வருகின்ற வேலைத்திட்டங்களுக்கு எங்களது பூரண ஆதரவு தொடர்ந்து இருக்கும் என்ற செய்தியை கூறிக்கொண்டு நிறைவு செய்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம்.ரீ.பௌசுள்ளாஹ் அவர்கள்:**
கௌரவ பதில் தவிசாளர் அவர்களே, நேரடி கண்கானிப்பில் ஒரு உறுப்பினர் ஈடுபடுவதால் சட்டப் பிரச்சினைகள் ஏதாவது இருக்குமா? ஊழியர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் இடையில் ஏதும் முரண்பாடு ஏற்படுமா?

**கௌரவ பதில் தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
இதில் உண்மையாக விளங்கிக் கொள்ள வேண்டியது என்னவென்றால், இது கண்காணிப்பே தவிர அதிகாரம் இல்லை. எங்களை மக்கள் அனுப்பியது கண்கானிப்பதற்குதான். இல்லாவிட்டால் அரசியல்வாதி, அரசாங்கம் என்று தேவையில்லை. அதிகாரிகளே இந் நாட்டை கொண்டு செல்லலாம். மக்களுக்கு தேவையான சட்டங்களை அரசாங்கம் இயற்றுகின்றது. அதுதான் உயர்சபையாக இருக்கின்றது. காலத்திற்கு காலம் சட்டங்கள் மாறும். முன்பு இருந்த அரசாங்கம் 19வது அரசியல் யாப்பை கொண்டு வந்து பல வகையான சுயாதீன ஆணைக்குழுவை நிறுவி இருக்கின்றது. காலத்திற்கு பொருந்தாது. தற்போதய அரசாங்கம் 20வது சீர்திருத்தத்தை கொண்டுவருகின்றது. மக்கள் அதில் அசௌகரியங்கள் ஏற்படும் என்பதற்காகத்தான் இந்த சட்ட மூலங்களை நிறைவேற்றுகின்றது. அதாவது பாராளுமன்றம் நேரடியாக இருக்காது. நேரடியாக மக்களோடு பிண்ணிப்பிணைந்ததுதான் உள்ளூராட்சி சபை. அதனால்தான் மாகாண சபைகளை கூட இரண்டாம் தரமாக கணித்து உள்ளூராட்சி சபைக்கும் 20வது அரசியல் யாப்பின் ஊடாக அதிகாரத்தை வழங்கியுள்ளது. எதிர்காலத்தில் ஒவ்வொருவரும் நாம் நினைப்பது போல் இல்லை.

சிங்களப் பிரதேசத்தில் ஒவ்வொரு உறுப்பினரும் ஒவ்வொரு பெரும் பிரதேசத்தை ஆளுகை புரிந்தவர்களாக இருப்பார்கள். சகலரும் 24 மணித்தியாலயமும் அப் பிரதேசத்து மக்களின் வேலைகளைத்தான் பார்த்துக் கொண்டிருப்பார்கள். அதுதான் அவர்களது தொழிலாக இருக்கின்றது. நான் அரச தொழிலில் இருந்து 3 ஆந் திகதி ஓய்வு பெற்றிருக்கின்றேன். தற்போது தான் விளங்குகின்றது முழு நேரமும் வந்து இருக்க வேண்டும் என்று, நான் முன்னாள் கௌரவ தவிசாளருக்கு பெரிய உதவி ஒன்று என்னால் வழங்க முடியவில்லை. அவர் என்னிடம் சொன்னார் நீங்கள் ஓய்வு பெறும் போது உங்களிடம் சில அதிகாரங்களை நான் கையளிப்பேன் என்று, அந்த நிலையை நினைக்கும் போது இங்கு இருக்கின்ற நாங்கள் அனைவரும் இருக்கின்ற மாதங்களை சரியான முறையில் பயன்படுத்த வேண்டும். ஏனென்றால் மக்கள் முன் மீண்டும் செல்ல வேண்டியவர்கள்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ பதில் தவிசாளர் அவர்களே, இன்று சம்மாந்துறை பிரதேச சபையின் 4வது சபையின் 30வது அமர்விலே ஒரு பாரிய மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயம், வல்ல இறைவன் பொருந்திக்கொள்ள வேண்டும். அண்மையிலே எமது சபையில் ஏற்பட்ட சிறு சிறு மாற்றங்களின் காரணமாக எமது முன்னாள் தவிசாளர் அவர்களுடைய இராஜினாமாவின் பின்னர் ஒரு சாதாரண குடும்பத்திலே பிறந்து வளர்ந்த ஒரு மகன் இந்த சபையினுடைய ஒரு தவிசாளராக வந்திருக்கின்றார் என்பதை இட்டு நான் மிகவும் சந்தோசமடைகின்றேன். இந்த ஊரிலே இந்த தேவைகள் அடைய வேண்டிய அபிவிருத்திகள் ஏலவே இருக்கின்றது. இருந்தாலும் சம்மாந்துறை பிரதேச செயலகம் அல்லது பிரதேச சபையினுடைய எல்லையை எடுத்துக் கொண்டால் மிகவும் பரந்த பட்சமான பிரதேசம் ஆகும். ஏரத்தாள எல்லா வகையிலுமே கூடுதலான தேவைகளை கொண்ட பிரதேசம். இதனை ஒரே தடவையின் கீழ் அல்லது ஒரே சந்தர்ப்பத்தில் அபிவிருத்தி செய்வது என்பதும் ஒரு இமாலய இலக்கு ஆகும்.

எனவே, இதன் முதற்கட்டமாக ஏரத்தாள நான் நினைக்கின்றேன் 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் இன்று வரைக்கும் இந்த சபையிலே மிகவும் ஒரு நெருக்கடியாக இருந்தது ஆளணிப் பற்றாக்குறை. போதுமான சுகாதாரத் தொழிலாளர்கள் இருக்கின்றார்கள், போதுமான வேலைத் தொழிலாளர்கள் இருக்கின்றார்கள். ஆனால் நிர்வாக உத்தியோகத்தர்கள் போதுமான அளவு இல்லை. அதிலும் குறிப்பாக தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் எங்களுடைய ஊரின் அல்லது எங்களது சபையினுடைய தேவைக்கு ஏற்ற வகையில் இல்லை. இதனால் இந்த சபையிலே எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள், இந்த ஊருக்கு செய்ய வேண்டிய வேலைகள் எல்லாம் மழுங்கடிக்கப்படுகின்றன அல்லது பிற்போடப்படுகின்றன. ஏதோ ஒரு காரணங்களினால் இங்கு மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானங்களும் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றது. எனவே, முதற்கண் உங்களிடம் வேண்டிக்கொள்கின்றேன். இந்த சபையினுடைய கௌரவ உறுப்பினர்கள் அனைவரையும் கேட்டவனாக, இந்த சபையினுடைய ஏக தீர்மானமாக இந்த சபைக்கு மேலதிகமான தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை வழங்க வேண்டும் என்று கிழக்கு மாகாண கௌரவ ஆளுணர் அவர்களுக்கு இந்த சபையினுடைய ஏகமனதான தீர்மானமாக நிறைவேற்றி அதனை எழுத்து மூலம் சமர்ப்பிக்குமாறு சபையினுடைய செயலாளர் அவர்களையும் கேட்டுக்கொள்கின்றேன்.

நீங்கள் இன்று விரிவாக்கம் செய்த வட்டாரக் கோவை உண்மையாக அதனை ஏற்றுக் கொள்கின்றேன். ஏனென்றால் 10 வட்டாரங்கள் 20 உறுப்பினர்கள். இதிலே தேவைகள் கூடிய வட்டாரங்கள் இருக்கின்றது, தேவைகள் குறைந்த வட்டாரங்கள் இருக்கின்றது. சில வட்டாரங்களிலே பாதை அபிவிருத்திகள், வடிகான் அபிவிருத்திகள் செய்ய வேண்டி இருக்கின்றது. சில வட்டாரங்களிலே கல்விகளுக்கான இடங்கள் அல்லது பாலர் பாடசாலைகள், நூலக சாலைகள் இவ்வாறான சேவைகள் செய்ய வேண்டி இருக்கின்றது. இவைகளை செய்வதற்கு நீங்கள் கூறியவாறு வட்டாரக் கோவை என்ற அமைப்பில் செய்வோமானால் இருக்கின்ற 20 உறுப்பினர்களுக்கு இடையில் ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்து நாங்கள் எந்த தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமோ அதற்காக எமது சபையில் இருந்து நிதிகளை எடுக்க முடியுமாக இருந்தால் அதை எடுத்து எமது வேலைகளை செய்யலாம். இரண்டாவதாக கௌரவ உறுப்பினர்களின் மேற்பார்வையில் ஒவ்வொரு வட்டாரத்திலும் வேலைகள் நடைபெற வேண்டும். ஒவ்வொரு பொறுப்புக்களையும் அவர்களுக்கு வழங்க வேண்டும் என்று கூறினீர்கள். உண்மையாக ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயம் ஆகும்.

ஒரு தவிசாளரால் தனியே 10 வட்டாரங்களையும் பராமரிப்பது என்பது அல்லது 10 வட்டாரங்களுக்கும் சென்று அங்கு இருக்கின்ற தேவைகளை அறிய வேண்டும் என்பது ஒரு சிரமமான விடயம். சம்மாந்துறை பிரதேச சபையினை பொருத்தவரையில் வட்டாரப் பிரதிநிதிகள் மேற்பார்வையாளர்களாக அல்லது அவர்களிடம் ஏதாவது ஒரு பொறுப்பு சாட்டப்படுமாக இருந்தால் தான் இதனை திறமையாக செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த சபைக்கு இது ஒரு நல்ல அபிமானத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தோடும் அவர்கள் எமது முன்னாள் கௌரவ உப தவிசாளர் அவர்கள் கூறியவாறு சபையின் நற்பெயருக்கு எந்த கலங்கமும்

விளைவிக்காத வடிவில் ஏனைய உறுப்பினர்களின் உள்ளங்களை துன்புறுத்தாத வகையிலும் இந்த மேற்பார்வை நடைபெற வேண்டும். தான் இதற்கு பொறுப்பாக இருக்கின்றேன், தன்னுடைய வட்டாரத்தை வைத்து தன்னுடைய அரசியலை இதிலே வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணக்கருவிலே அவ்வாறான நோக்கிலே இந்த மேற்பார்வை செல்லுமாக இருந்தால் நாங்கள் அதனை இரத்துச் செய்வதே சிறந்தது. இந்த சபைக்கும், உறுப்பினர்களுக்கும் எந்த வகையிலும் கலங்கம் ஏற்படக்கூடாது என்பதிலே எமது முன்னாள் கௌரவ தவிசாளர் மிகவும் உறுதியாக இருந்தவர். அதனை நாங்கள் எல்லோரும் ஏற்றுக் கொள்கின்றோம்.

அபிவிருத்தி என்கின்ற விடயங்களில் சில சந்தர்ப்பங்களில் நாங்கள் கோரிய விடயங்கள் நடைபெறாமல் இருந்தாலும் எங்களுக்குள் முறண்பாடுகள் வரக்கூடாது என்பதிலே மிக தெளிவாக இருந்தவர். அதனை நாங்கள் அவ்வாறு ஒரு கோணத்தில் சென்று அந்த முரண்பாட்டை இந்த சபைக்குள் ஒருவருக்கு ஒருவர் பாய்கின்ற, கடிக்கின்ற சூழ்நிலைக்கு இட்டுச் செல்லாதவாறு நாங்கள் அதனை வடிவமைத்துக் கொள்ள வேண்டும். அத்தோடு கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த 2020.07.07 இல் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் சில வேலைகள் முன்னிறுத்தப்பட்டு வருகின்றன. அதில் சென்னல் கிராமம் - 02ம் பிரிவில் உள்ள அப்ரார் வீதிக்கு வடிகான் அமைப்பதற்காக எமது சபையில் இருந்து நிதியை எடுத்து மீதி வேலையை செய்வதற்காக தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. ஏதோ என்னுடைய முயற்சியினாலும், அப் பிரதேசத்து மக்களின் முயற்சியினாலும் சப்பிரிகம வேலைத்திட்டத்தின் ஊடாக ஒதுக்கப்பட்ட நிதியின் ஊடாக அவ் வேலையை முடித்து விட்டோம். அதற்காக சபையிலே இருக்கின்ற பணத்தினை ஒதுக்கீடு செய்ய தேவையில்லை.

இருந்தாலும் அவ் வட்டாரத்திலே மிக முக்கியமாக செய்ய வேண்டிய தேவைகள் இருக்கின்றது. அதாவது ஒரு கல்வெட் மற்றும் 30M தூரமான வடிகான். அக் கல்வெட் ஏறத்தாள 3 தடவைகள் என்னால் இந்த சபையிலே அதற்கான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டு பிரேரணைகளும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. போதிய நிதி சபையில் இல்லாத காரணத்தினால் அது செய்யக் கிடைக்கவில்லை. ஆனால் இன்று ஒரு சந்தர்ப்பம் இருக்கின்றது. சப்பிரிகம வேலைத்திட்டத்தில் மீதி வேலைகளை செய்வதற்காக ஒதுக்கப்பட்ட பணத்திலே அவ் வேலையினை செய்து தருமாறு வேண்டியவனாக, அவ்வாறே கைகாட்டி குளக்கரையையும் அதனை அண்மித்த பகுதியையும் பொழுதுபோக்கு தளமாக மாற்றுவதற்கான வேலை ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதன் முதற்கட்டமாக மின்விளக்குகள் பொருத்தப்பட்டிருக்கின்றது. இன்ஷா அல்லாஹ் இன்னும் ஓர் இரு தினங்களுக்குள் அதற்கான இருக்கைகள் பொருத்தப்படும். ஆனால் இதில் ஒரு கவலையான விடயம் என்னவென்றால் இவ் இடத்தில் கூறியே ஆக வேண்டும். கௌரவ முன்னாள் தவிசாளர் அவர்கள் அந்த இடத்தை நேரிலே வந்து பார்வையிட்டு அதன் பின்னர் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், செயலாளர் அனைவரும் அவ் இடத்தை பார்வையிட்டு ஏறத்தாள 08 மின்கம்பங்களுக்கு மின் விளக்குகள் பொருத்த வேண்டிய தேவைப்பாடுகள் இருந்தது.

அந்த நேரம் கௌரவ தவிசாளர் அவர்கள் 5 மின் விளக்குகளை பொருத்துவதற்கு அனுமதி அளித்தாக கூறி 05 மின் விளக்குகள் பொருத்தப்பட்டிருக்கின்றது. மீதி 03 மின் கம்பங்களிலும் 03 மின் விளக்குகள் இருக்கின்றது. நான் அதற்கு பொறுப்பான தொழில்நுட்ப உத்தியோகத்தரிடம் தொலைபேசியின் ஊடாக அவ் வேலை நடைபெற்ற போது இன்னும் 03 மின்விளக்குகள் இருக்கின்றது. அது தரம் குறைந்தது தற்போது பொருத்தப்படுகின்ற தரத்தில் அதனை பொருத்தித் தாருங்கள் என்று கூறினேன். நான் உடனடியாக தவிசாளர் அவர்களிடம் கூறுகின்றேன் என்றார். ஆனால் அவ் வேலை நடைபெறவில்லை. இன்று காலை அந்த தொழில்நுட்ப உத்தியோகத்தரினை சந்தித்து அதனை கூறிய போது அவர் வழங்கிய பதில் இரவு வேளைகளில் வந்து பார்த்துவிட்டு அம் மின்விளக்கை மாற்றித் தருகின்றேன் என்று கூறினார். என்னைப் பொருத்தவரைக்கும் இது இந்த சபையில் இருக்கின்ற ஒரு கௌரவ உறுப்பினருக்கு கூறக்கூடிய பதில் அல்ல. இவ்வாறான விடயங்கள் இச் சபையில் நடக்கக்கூடாது. இங்கு இருக்கின்ற ஒவ்வொரு உறுப்பினர்களும் பெறுமதியானவர்கள். ஏதோ ஒரு வகையில் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள். எனக்கு சொன்னதற்காக, என்னிடம் பேசியதற்காக கூறவில்லை. இவ்வாறான விடயங்கள் இந்த சபையிலே இடம்பெறக்கூடாது என்பதில் நான் மிகவும் உறுதியாக இருக்கின்றேன்.

எனவே கௌரவ பதில் தவிசாளர் அவர்களே, தற்போது நாங்கள் எடுக்கின்ற தீர்மானங்கள் எல்லாவற்றுக்கும் அப்பால் எமது சபையில் இருக்கின்ற நிதியினை நாம் செலவீடு செய்யவும் வேண்டும். சபையிலே இருக்கின்ற நிதியினால்தான் எமது தேவைகளை பூர்த்தி செய்யலாம். அதே வேளை எமது சபைக்கான செலவீடுகளும் இருக்கின்றது. ஏறத்தாள நாங்கள் இவ் வருடத்திற்கான ஒரு வரவு செலவு திட்டத்தில் இருந்து நாங்கள் எதிர்பார்த்த அந்த தொகையில் இருந்து எவ்வளவு பணம் கிடைத்திருக்கின்றது, எவ்வளவு பணம் கிடைக்க வேண்டி இருக்கின்றது என்பதைப் பற்றி நாங்கள் ஆராய வேண்டி இருக்கின்றது. அதே வேளை இருக்கின்ற 08ம் மாதத்தை சேர்த்துக் கொண்டாலும் அல்லது கழித்துக் கொண்டாலும் ஏதோ மீதம் இருக்கின்ற டிசம்பர் வரைக்குமான 04 மாத காலங்களுக்கும் ஏறத்தாள 13 மில்லியன் பணம் சபைக்கான தேவைக்காக திட்டமிட்ட வகையிலே தேவைப்பட இருக்கின்றது. அதே போன்று அடுத்த வரவு செலவு திட்டத்தில் அப் பணத்தை நாம் அடைய வேண்டுமாக இருந்தால் ஏப்றில் மாதம் வரைக்கும் இச் சபை நடவடிக்கைகளைக் கொண்டு செல்ல வேண்டும். இவற்றையும் கருத்திற் கொண்டு எங்களுடைய இந்த வேலைத்திட்டங்களை செய்ய ஆவண செய்யுமாறு மிகவும் பணிவாக வேண்டிக்கொள்கின்றேன்.

**கௌரவ பதில் தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
சம்மாந்துறை நீதவான் நீதிமன்றத்தின் கட்டட சிறு சிறு குறைபாடுகளை நிவர்த்தி செய்வது தொடர்பாக எமது சபைக்கு கிடைக்கப்பட்ட கடிதத்தின் பிரகாரம் நாங்கள் எமது தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை அனுப்பி அதற்கான திட்டம் ஒன்று தயாரித்துள்ளோம். அது கிட்டத்தட்ட ரூபா 475,000.00 மொத்த தொகை வருகின்றது. இதை நாங்கள் நீதிமன்றம் என்ற வகையில் ஏனென்றால் அதன் ஊடாகத்தான் நமக்கு பாரிய வருமானம் கிடைக்கின்றது. எனவே நாங்கள் இவ் வேலையை செய்து கொடுக்க வேண்டும் என்பதுதான் ஒரு நியதி போல் தெரிகின்றது. இதற்கு உங்களது அங்கீகாரம் வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நீதிமன்றத்தினால் அல்லது அமைச்சினால் அனுப்பப்பட்ட கடிதத்தை வாசித்தால் அதில் கூறப்பட்டிருக்கும் தேவைகள் பூர்த்தி செய்வதற்கு உண்மையாக நாம் தயங்க தேவையில்லை. ஆனால் பிரதேச சபை சட்டத்தின் கீழ் வேறு நிறுவனங்களுக்கு இப்படியான தொகைகளை நாம் செலவீனம் செய்வதற்கு நமக்கு அங்கீகாரம் இல்லை. இதை அமைச்சருக்கு அல்லது அமைச்சராக இருக்கும் ஆளுநர் அவர்களுக்கு உத்தியோகபூர்வமாக எழுதி அந்த உடன்பாட்டோடு நிச்சயமாக செய்யலாம். செய்வதற்கு தடை இருப்பது சட்டம். அந்த தடையை நாம் அமைச்சரின் அனுமதியை எடுப்பதனால் அதை செய்யக்கூடிய வாய்ப்பு நமக்கு இருக்கும்.

**கௌரவ பதில் தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ முன்னாள் தவிசாளரின் கூற்றுக்கு அமைவாக நான் நினைக்கின்றேன், அரசாங்கத்தால் அமைச்சு நியமிக்கப்பட்டதன் பின்னர் நேரடியாக அமைச்சரின் அனுமதியோடு இதை செய்யலாம். எனவே அமைச்சரின் அனுமதிக்காக அனுப்பி வைப்பதற்கு செயலாளரை வேண்டிக்கொள்கின்றேன்.

## தீர்மானம் - 04/30/02

JCB வாகனத்தின் முன்கண்ணாடியினை மாற்றுவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ பதில் தவிசாளர் | ஏ.அச்சி முஹம்மட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

## தீர்மானம் - 04/30/03

சம்மாந்துறை நீதவான் நீதிமன்ற மின் விசிறி, மின்விளக்குகள் பொருத்துதல் மற்றும் வாகனத் தரிப்பிடக் கூரை அமைத்தல், சில்வர் தடுப்புச் சுவர் அமைத்தல் தொடர்பாக உள்ளுராட்சி

ஆணையாளர் கிழக்கு மாகாணம் அவர்களிடம் அனுமதி பெற்று சபையினால் நிறைவேற்றுவது தொடர்பான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ பதில் தவிசாளர் | ஏ.அச்சி முஹம்மட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ பதில் தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
செலவீனங்களை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கின்றேன். அதில் ஏதாவது கேள்விகள் இருப்பின் அதனை கேட்கலாம்.

**கௌரவ உறுப்பினர் வீ.ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ பதில் தவிசாளர் அவர்களே, eLG மென்பொருள் பராமரிப்புக்கான கொடுப்பனவு ஜனவரி தொடக்கம் ஜுன் வரை ரூபா 60,000.00 என்று இருக்கின்றது. அதன் விளக்கத்தை கூறுங்கள்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இதற்கான விளக்கம் E - Government திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பிரதேச சபைக்கும் ஒரு Software Programme ஒன்று நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அதற்கு முதல் ICTA நிறுவனத்தினால்தான் அரசாங்கம் மூலமாக செய்யப்பட்டது. பின்னர் அவர்கள் இதை தனியார்மயப்படுத்தப்பட்டதால் அவர்களின் சிபாரிசில் நிறுவனத்தோடு செய்யப்பட்ட ஒப்பந்தத்திற்கான மாதாந்த செலவு ஆகும்.

**கௌரவ உறுப்பினர் வீ.ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ பதில் தவிசாளர் அவர்களே, எமது சபையில் அதன் ஊடாக என்ன நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

**கௌரவ பதில் தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் அவர்களுக்கு விணயமாக ஒரு விடயத்தை நான் முதலிலே கூறியிருக்க வேண்டும். கௌரவ முன்னாள் தவிசாளர் அவர்கள் 10 ஆந் திகதி தனது இராஜினாமா கடிதத்தை கையளித்து இருந்தாலும் 11 ஆந் திகதிதான் உத்தியோகபூர்வமாக இச் சபைக்கு வந்தேன். 11 ஆந் திகதிக்குள் நாங்கள் ஒருநாள் செயலாளரையும் அழைத்துக் கொண்டு திருகோணமலைக்கு சென்று எமது பிரதேச எல்லைக்குள் 51 கிராம சேவகர் பிரிவு இருக்கின்றது. இங்கு இருக்கின்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் குறைவு. அதனால் ஆளணியை கூட்டித்தர வேண்டும் என்று பிரதம செயலாளர் அவர்களிடம் கதைத்து ஏனைய அலுவல்கள் சம்மந்தமான வேலைகளையும் பார்த்து அதிலே ஒரு நாள் சென்றுவிட்டது. ஏனைய சில விடயங்களை படிப்பதற்காக ஒரு பூரணமாக இதற்கு பதில் அளிப்பது என்றால் எமது முன்னாள் தவிசாளர் அவர்கள் இச் சபையில் இருக்கின்றார்கள், அவர் ஒவ்வொரு அங்கமாக பரிசீலனை செய்திருப்பார் என்று நினைக்கின்றேன். எனவே, இதில் நடைமுறை சில விடயங்களை விளங்கிக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்கள்:**
இதில் ஒளிவு மறைவு ஒன்றும் இல்லை. வருமானப் பிரிவில் Assessment Software நடைபெறுகின்றது. அதற்கு Maintance தான் இது.

**கௌரவ உறுப்பினர் வீ.ஜெயச்சந்திரன் அவர்கள்:**
Digital Board இற்கு ரூபா 15 இலட்சம் முற்பணம் என்று இருக்கின்றது. அதை கூறுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்கள்:**
இது உண்மையாக நிர்வாகத்தினால் வழங்கப்பட வேண்டிய ஒரு விளக்கம். ஆனால் எனது காலத்தில் இது நடந்த படியினால் நான் பதில் அளிக்க வேண்டியவனாக இருக்கின்றேன். கொவிட் 19 காலத்தின் போது இது அடைக்கப்பட்டு அதை செயற்படுத்துவதற்கு எமக்கு 2 தடைகள் வந்தது. ஒன்று அதற்கு இறுதியில் தேவைப்பட்ட சில உபகரணங்கள் எமது துறைமுகத்தில் இருப்பதனால் அவை Clear பண்ற ஒரு பிரச்சினை. அடுத்தது நமது சபையில் 60KB இற்குரிய Supply தான் இருக்கின்றது. Digital Board உம் செய்தால் 90KB வேண்டும். அதற்குரிய Application செய்யப்பட்டிருக்கின்றது. நான் நினைக்கின்றேன் இன்னும் 2 கிழமை காலத்துக்குள் இது நிவர்த்தி செய்யப்படும். இலத்திரனியல் விடயங்களில் Suppliers ஆகக் குறைந்தது Order Conformation உடன் 70% முற்பணம் கோருவது வழமை. அந்த செலவுதான் செய்யப்பட்டுள்ளது. இது பொருத்தப்பட்டுள்ளது ஆனால் இயக்குவதற்கு மின் சக்தி குறைவாகவும், சில உபகரணங்கள் குறைபாடு இருப்பதனால் அது பூர்த்தி செய்யப்பட்ட பின் முழுச் செலவும் காட்டப்படும்.

**தீர்மானம் - 04/30/04**
சென்ற மாதம் 2020.07.01 தொடக்கம் 2020.07.31 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அனுமதி வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ பதில் தவிசாளர் | ஏ.அச்சி முஹம்மட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி.எம்.சஹீல் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ பதில் தவிசாளர் அவர்களே, இன்றைய சபை அமர்வில் Media உள்வாங்கப்பட்டுள்ளது. இந்த Media இனை சபைக்குள் எடுப்பதற்கு சபையில் உள்ள உறுப்பினர்களின் அனுமதியினை பெற்றுக் கொண்டீர்களா? ஏற்கனவே Media ஒன்று எமது கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்களுக்காக வர இருந்ததற்கு எமது முன்னாள் கௌரவ தவிசாளர் அவர்கள் சபை உறுப்பினர்களின் அனுமதியை கோரி அதனை இரத்து செய்தார்கள். ஆனால் Media ஒன்று சபைக்குள் வருவதாக இருந்தால் கௌரவ உறுப்பினர்களின் அனுமதியை கோர வேண்டும் என்பதும் சபைச் சட்டத்தில் உள்ளது. Media இனை உள்வாங்குவதற்கு சபை உறுப்பினர்களிடம் அனுமதியினை கோரினீர்களா? என்பதனை சபை எல்லோருக்கும் தெரியப்படுத்தவும்.

**கௌரவ பதில் தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
Media எப்போதுமே செய்தி சேகரிப்பவர்கள். அப் பிரேரணையை பொருத்தவரையில் கௌரவ உறுப்பினர் அவர்களுக்கு எதிராக சாட்டப்பட்ட ஒரு விவாதம். அதற்கு நாம் கட்டாயம் அனுமதி பெற வேண்டும். ஆனால் இன்றைய நிலையில் அப்படி ஒன்று யாருக்குமே இல்லை. இன்றைய அமர்வுக்கு Media வந்திருக்கின்றார்கள். நாம் Media இற்கு என்று இடமும் ஒதுக்கி இருக்கின்றோம் தானே, Media சுதந்திரத்தினை நாம் பாதுகாக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ பதில் தவிசாளர் அவர்களே, உங்களது கருத்தை உள்வாங்கியவளாக இவ் இடத்தில் உள்வாங்குவதற்காக Media இனை அழைப்பது என்றால் கௌரவ உறுப்பினர்களின் அனுமதியும் இருக்க வேண்டும் என்பதை இவ் இடத்தில் வலியுறுத்துகின்றேன்.

**கௌரவ பதில் தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் அவர்களின் வேண்டுகோள் இங்கு அமைந்திருக்கும் சபை உறுப்பினர்கள் யாராவது இந்த Media உள்வந்ததற்கு எதிர்ப்பு தெரிவித்தால் உடனே அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, என்னைப் பொருத்தமட்டில் இது ஒரு எதிர்ப்பாக கருதாமல் Media இவ் அமர்வுகளுக்கு அனுமதிக்கும் போது சபை அமர்வுகள் ஆரம்பிக்கும் போதே இன்று நான் Media வை அனுமதித்து இருக்கின்றேன் என்று கூறி இருந்தால் இப் பிரச்சினை ஒன்று வந்திருக்காது. அவ் அறிவித்தலை கொடுத்திருந்தால் எல்லோருக்கும் தெரியும் Media இருக்கின்றது என்று, இவ்வளவு காலமும் நமது சபைகளில் நாம் விரும்பி எல்லாவற்றையும் பேசுவதற்கு ஒரு காரணம் Media Coverage இல்லை. ஆனால் எல்லாம் ஹன்சார்ட் இல் வருகின்றது. அதை செய்தியாக கொண்டு செல்லும் போது தலைப்புகள் மாறுகின்ற போது பிரச்சினைகள் உருவாகின்றது. அதனால்தான் Media இருக்கின்றது என்ற ஒரு அறிவித்தல் இருக்கும் போது அங்கத்தவர்கள் பேசும் போது அவர்களின் பேச்சுக்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.

**கௌரவ பதில் தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர்களுக்கு நான் வேண்டிக் கொள்வது, Media வரலாமா என்று கேட்ட போது 10 மணிக்கு பின்னர்தான் எமது கூட்டம் ஆரம்பிக்கப்படும் என்று கூறினேன். ஏனைய Media என்றால் உங்களிடம் உரிமை கோரி அவர்கள் வரப்போகின்றார்கள் என்று கூறியிருப்பேன். தற்போது பிரசன்னமாயிருக்கின்ற Media இனை பொருத்தவரையில் அவர் ஒரு உதவிக் கல்விப் பணிப்பாளர். அவர் சில நேரம் வரலாம், வராமலும் விடலாம். உங்களது அனுமதியினைப் பெற்று வராவிட்டால் அது சங்கடமாக இருக்கும் என்பதும் ஒரு காரணம். அப்படி ஏதாவது ஒரு உறுப்பினருக்கு அசௌகரியம் என்றால் நாங்கள் விணயமாக அவரிடம் கூறலாம்.

நூலகங்களுக்கு புதிய பாடத்திட்டத்திற்கமைய நூல்கள் கொள்வனவு செய்தல் தொடர்பாக, O/L, A/L மாணவர்களுக்குரிய வினாவிடைப் புத்தகங்களும் அதில் அடங்கும். நான் எனது ஒரு A/L புத்தகம் கொள்வனவு செய்த போது அப் புத்தகத்தின் விலை ரூபா 750.00 ஆகும். 04 பாடங்கள் என்று சொல்லும் போது ரூபா 3000.00 இற்கு மேல் வரும். எனவே பாடரீதியாக அந்த உதவியை வழங்கினோமானால் நூலகங்களுக்கு பிள்ளைகளின் வரவும் கூடும். நான் சென்ற முறை கல்லரிச்சல் நூலகத்தை சென்று பார்க்கும் போது அது எவ்வளவோ காலம் உருவாக்கப்பட்டது. ஆனால் அதில் அங்கத்தவர்களை பார்க்கின்ற போது மிகவும் குறைவாக இருந்தது. கஸ்ஸாலி வித்தியாலயம், ஏத்தாளக்குள வித்தியாலயம் அருகில் உள்ளது. நூலகங்கள் எந்த நேரமும் மக்கள் தொடர்பாக இருக்க வேண்டும். அவர்களுக்கு அந்தந்த காலத்திற்கு தேவையான புத்தகங்களை கொடுக்க வேண்டும். அதே போன்று மல்வத்தையையும் சென்று பார்த்தேன். அவர்களிடமும் அந்த அறிவுரைகளை வழங்கினோம். அதே போல் முகைதீன் நூலகம், அமீர் அலி நூலகம் என்பவற்றில் இத் தொடர்புகளை ஏற்படுத்த வேண்டும். நான் அடிக்கடி கூறி இருக்கின்றேன் கல்விதான் எங்களது மூச்சு, கல்விதான் எங்களது பேச்சும் என்று, கல்வியை அடிப்படையாக வைத்து நாங்கள் நூலகத்திற்கு உதவி வழங்க வேண்டும் என்று வேண்டிக் கொள்கின்றேன்.

**தீர்மானம் - 04/30/05**
நூலகங்களுக்கு புதிய பாடத்திட்டத்திற்கமைய நூல் கொள்வனவு செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ பதில் தவிசாளர் | ஏ.அச்சி முஹம்மட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் வை.பீ.எம்.முஸம்மில் அவர்கள்:**
கௌரவ பதில் தவிசாளர் அவர்களே, கொரோனா காலத்தின் பின் கல்வியில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை அறிந்து இருப்பீர்கள். தற்போது எல்லோரும் online இல் படிக்க வேண்டிய கட்டத்தில் இருக்கின்றோம். online இல் படிப்பதற்கு பணம் செலுத்திதான் படிக்க வேண்டி

இருக்கின்றது. சில வசதி குறைந்த குடும்பங்களில் online இற்கு பணம் செலுத்த முடியாமலும், அதற்குரிய Smart Phone இல்லாதவர்களும் மிகவும் கஸ்டமான நிலைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பதை நீங்கள் எல்லோரும் அறவீர்கள். எமது கல்வி நிலையங்களாக இருக்கின்ற நூலகங்களுக்குள் online வகுப்புகள் நடைபெறுகின்ற நேரங்களில் உரிய ஆசிரியர்களை கருதி பிரதேச சபை பணத்தில் எல்லோர் அங்கீகாரத்துடனும் பணத்தை செலுத்தி online இல் படிக்க முடியாத வசதி குறைந்த பிள்ளைகள் இருப்பார்களானால் அவர்களை எடுத்து எமது நூலகங்களில் அதற்குரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தால் பிள்ளைகளுக்கு சௌகரியமாக இருக்கும் என்பது எனது கருத்து.

கடந்த காலங்களில் உயர்தரம் படிக்கின்ற மாணவர்கள் வெளியூர்களில் இருந்து கல்வி கற்றுக் கொண்டிருக்கிறார்கள். சிலர் Tute களை எடுத்து உதவியாக செய்து கொண்டிருக்கின்றார்கள். அது கூட கிடைக்க முடியாத நிலையில் கொரோனாவினால் போக்குவரத்து சிரமமாக இருக்கின்றது. எமது சபையால் முடியும் என்று சொன்னால் யாழ்ப்பாணத்தில் உள்ள, ஏனைய தனியார் வகுப்புகள் ஊடாக வெளியிடப்படுகின்ற Tute களை எடுத்து எமது நூலகங்களில் வைப்பதால் அப் பிள்ளைகள் பயனடையலாம். ஏனென்றால் தற்போது கல்வி என்பது போட்டியாக இருக்கின்றது. Online இல் படிப்பதில் பல சிரமங்கள் இருக்கின்றது. எமது சமூகத்தில் Online இல் படிக்கின்ற முறை தெரியாது. இதற்கு நாம் ஒரு முடிவு எடுத்து இச் சபையின் அனுமதியோடு உரிய ஆசிரியர்களை அணுகி Online இல் கற்கின்ற நேரங்களை தொலைபேசி ஊடாக அறிவித்து சம்மாந்துறை பிரதேச சபையின் ஊடாக இந்த இடங்களில் இந்த ஆசிரியர்களைக் கொண்டு கல்வியை Online இல் செய்து கொண்டிருக்கின்றோம், விரும்பிய மாணவர்கள் வந்து கற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கலாம். சில வசதி குறைந்த பிள்ளைகள் வசதியுள்ள பிள்ளைகளின் வீட்டில் Online இல் படித்துக் கொண்டிருக்கின்றார்கள். இதை ஒரு நூலகத்தில் செய்யும் போது இலகுவாக இருக்கும் என்பது எனது கருத்து.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, பாடப்புத்தகங்கள் வழமையாக வருடாந்தம் சபையினால் கொள்வனவு செய்யப்படுகின்றது. அதில் ஒரு காலமும் தடை இருந்ததில்லை. ஆனால் கௌரவ உறுப்பினர் முஸம்மில் கூறியது போல் Online பாடங்களுக்கு உதவுவது பொருத்தமானது. அதில் ஒரு தடை என்னவென்றால் ஒரே நேரத்தில் பல வகுப்புகளின் Online வகுப்புகள் ஒரே நேரத்தில் ஒலி பரப்பப்படுகின்றது என்று நினைக்கின்றேன். அப்படி வரும் போது எந்த Target Group இனை திருப்திப்படுத்துவது என்ற ஒரு சிக்கல் வரலாம். ஆனால் நிச்சயமாக எமது நூலகங்கள் எல்லாவற்றுக்கும் இணைப்புகள், கணனிகள் போன்ற வசதிகள் இருக்கின்றது. அதை செய்யலாம் ஆனால் நேரங்கள் சில நேரம் பிரச்சினையாக இருக்கலாம். இந்த முன்மொழிவை நாம் கவனத்தில் எடுப்பது நல்லது என நான் நினைக்கின்றேன். ஆனால் கொள்வனவு என்பது வருடாந்தம் செய்வது, அவசரமாக அப் புத்தகங்களை எடுத்து நூலகங்களுக்கு வழங்க வேண்டும் என்று நான் சிபார்சு செய்கின்றேன்.

**கௌரவ பதில் தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
ஏற்கனவே கல்வி அபிவிருத்திக்கு என்று நாம் ஒதுக்கிய பணமும் இருக்கின்றது. அவைகளையும் பார்க்கலாம். கௌரவ உறுப்பினர் அவர்கள் கூறியது போல் Online வந்தது கொரோனாவினால். எனவே ஆட்களை ஒன்றாக சேர்த்து செய்வதில் சிக்கல்கள் வருமா என்பதையும் நாம் ஆராய வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நூலகங்களின் நேரங்களையும் அதிகப்படுத்தினால் மிகவும் வசதியாக மாணவர்களுக்கு இருக்கும் என்று நினைக்கின்றேன். நூலகம் மூடப்படுகின்ற நேரங்களை கூட்டி இரவு நேரங்களில் 08 மணி அல்லது 09 மணிக்கு மூடினால் நல்லது என நினைக்கின்றேன்.

**கௌரவ பதில் தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
இதில் நடைமுறைச் சிக்கல் இருக்கின்றது. 09 மணி என்று சொன்னால் பெண் பிள்ளைகளுக்குரிய வசதிகளை அப் பெற்றார்கள் பாரம் எடுக்க வேண்டும். இரவு நேர பாடங்களில் பெற்றோர்கள் வந்து உரிய நேரத்திற்கு கூட்டிக்கொண்டு செல்கின்ற பிரச்சினை இருக்கின்றது. கௌரவ உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை முன்பு ஒரு தடவை எமது முன்னாள் தவிசாளர் அவர்களிடம் கூறி இருக்கின்றேன். பெண் பிள்ளைகள் இரவு நேரங்களில் இங்கு பாடங்கள் படித்தால் பெற்றோர்கள் துணையோடு படிக்க வேண்டும் என்று பகிரங்கமாக ஒரு பலகையில் எழுதி தொங்கவிட வேண்டும். இல்லாவிட்டால் அது எமக்கு பிரச்சினையாக வரும்.

**கௌரவ உறுப்பினர் வை.பீ.எம்.முஸம்மில் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, Online வகுப்பிற்கும் பணம் செலவளித்து Wifi இற்கும் அப் பிள்ளைகள் பணம் செலவளிக்கின்றார்கள். எம்மிடம் Wifi Free ஆக இருப்பதனால் அவர்களிடம் கூறலாம் எமது wifi இனை பாவிக்கலாம் என்று, பெண்பிள்ளையாக இருந்தால் தாய் தந்தையர்களின் அனுசரனையோடு வந்து wifi இனை பயன்படுத்தலாம். முன்னாள் தவிசாளர் அவர்கள் கூறியது போல் எல்லா வகுப்புகளும் அவ்வாறு நடக்கவில்லை. உதாரணமாக ஒரு இரசாயனவியல் வகுப்பு நடக்கின்றது என்றால் பிள்ளைகளின் நேரப்படிதான் ஏனைய ஆசிரியர்களும் செய்கின்றார்கள். பிள்ளைகளை ஒன்று சேர்க்க இயலாது என்ற காரணத்திற்கே தவிர online இல் உழைக்க வேண்டும் என்ற முடிவு இல்லை. அந்த செலவை குறைப்பதற்காக எமது இடத்தையும் wifi இனையும் கொடுப்பதற்கு அனுமதி வழங்கினால் அது பெரிய ஒரு உதவியாக இருக்கும் என்பது எனது கருத்து ஆகும்.

**கௌரவ பதில் தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
இவ் விடயத்தை உள்வாங்கி நகரத்தை மட்டும் சிந்திக்காமல் வளத்தாப்பிட்டி, மல்வத்தை போன்ற பிரதேசங்களுக்கும் இதனை விஸ்தரிப்பது என்றால் கௌரவ முன்னாள் உப தவிசாளர் அவர்களையும், சென்னல் கிராம பிரதேசத்திற்கு கௌரவ உறுப்பினர் சஹீல் அவர்களும், சென்னல் கிராமம் - 02 பிரதேசத்திற்கு கௌரவ உறுப்பினர் நளீம் அவர்களும் ஒன்றிணைந்து எதிரே வருகின்ற காலத்தில் அப்படி செய்ய வேண்டும் என்ற ஆலோசனையை முன்வைத்தால் எனக்கு கிடைக்கின்ற சந்தர்ப்பத்தில் என்னால் முடியுமான உதவிகளை செய்வேன் என்று கூறிக்கொள்கின்றேன்.

**தீர்மானம் - 04/30/06**

தற்போது Online Classes நடைபெறுவதால் வசதி குறைந்த மாணவர்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். இதனால் எமது நூலகங்களில் Online Classes இற்குரிய வசதிகளை (Wi-Fi) ஏற்படுத்தி வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | வை.பீ.எம்.முஸம்மில் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம்.றியாஸ் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ பதில் தவிசாளர் அவர்களே, வரவு செலவுத் திட்டத்தில் இன்னும் ஒரு தெளிவு தேவையாக இருக்கின்றது. JCB இற்கான பின் கண்ணாடி பொருத்துதல் தெடர்பாக ரூபா 112,236.50 என Quotation இணைக்கப்பட்டுள்ளது. ஆனால் அதற்கான செலவு கோரிக்கையில் ரூபா 148,846.00 என்று இருக்கின்றது. இதற்கான விளக்கத்தினை கூறுங்கள்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்கள்:**
அதில் ரூபா 148,846.00 மீதி இருக்கின்றது என்பதுதான் அதன் கருத்து.

**கௌரவ பதில் தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கொரோனா ஏற்பட்டதன் பின் சந்தையில் மக்கள் செறிந்து இருப்பதால் சென்று வர முடியாமல் முதல் இருந்த மேசைகள் சந்தையை பராமரிப்பாளர்களின் மேசையாக இருந்தது. அது அகலம் என்ற காரணத்தினாலும் நடைபாதையில் வியாபாரம் செய்வது தவிர்க்க முடியாத ஒரு கட்டம் ஏற்பட்டதை நாடி சுகாதார அதிகாரிகளின் வேண்டுகோளிற்கு இணங்க அவர்களின் அளவீட்டு மதிப்பாக சில மேசைகள் புதிதாக போடப்பட்டுள்ளது. அதற்கான செலவை அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**தீர்மானம் - 04/30/07**
சம்மாந்துறை ஹிஜ்றா பொதுச் சந்தையின் நடைபாதை வியாபாரத்திற்கு தேவையான மேசைகளை கொள்வனவு செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ பதில் தவிசாளர் | ஏ.அச்சி முஹம்மட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என்.கோவிந்தசாமி |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/30/08**
தொழில் பயிற்சி நிறுவனங்களில் இருந்து பயிற்சி பெற 06 பயிலுனர்களை பயிற்சிக்காக (பயிலுனர்களாக) சேர்த்துக் கொள்வதற்கும் சபை நிதியில் இருந்து 04/2017 இலக்க சுற்று நிருபத்திற்கமைய மாதாந்த கொடுப்பனவு வழங்குவதற்குமான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ பதில் தவிசாளர் | ஏ.அச்சி முஹம்மட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம்.ஜிப்ரி |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ பதில் தவிசாளர் அவர்களே, செலவு சம்மந்தமான விளக்கம் தேவையாக உள்ளது. அதாவது புத்தகக் கொள்வனவு அமீர் அலி பொதுநூலகத்திற்கு ரூபா 93600.00 இற்கு கொள்வனவு செய்யப்பட்டதாக இருக்கின்றது. அது என்ன புத்தகங்கள், என்ன அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டது என்று தெளிவு இல்லாமல் இருக்கின்றது. எனவே எதிர்வரும் கூட்டத்திலாவது அது இணைக்கப்பட வேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ பதில் தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
வீதிகளில் உள்ள சோடியம் மின்குமிழ்கள் மின்னை அதிகமாக வீண்விரயம் செய்கின்றது. அதனால் அதற்கு பதிலாகவும் LED மின்விளக்குகள் 100 அல்லது 150 கொள்வனவு செய்து பிரதான பாதைகளில் பொருத்த வேண்டும். இப் பணம் எமது வரவு செலவு திட்டத்தில் உள்வாங்கப்பட்டு ஏதோ ஒரு காரணத்தில் எடுத்து எங்களது காலத்திற்குள் இதனை செய்ய வேண்டும் என்ற எனது அபிப்பிராயத்தை சபைக்கு சமர்ப்பிக்கின்றேன். தற்போதைய காலம் எங்களுக்கு ஏற்ற மாதிரி ஓரளவு நாங்கள் இந்த அரசியலில் இணைந்திருப்பது நாங்கள் அமைச்சர்களும் அதற்குரிய நபர்கள் இருப்பதனால் இப் பணத்தை ஏதோ ஒரு வகையில் வேறு அபிவிருத்திக்காவது கொண்டு சேர்ப்பதற்கு உங்களிடம் ஒரு ஒப்புதல் வாங்கியவனாக, இதற்கு அனைவரும் ஆதரவு அளித்து இதை கொள்வனவு செய்து பொருத்த வேண்டும் என்பதை உங்களிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தெருலாம்புகள் பொருத்துவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. அழகு என்பது ஒவ்வொரு கண்ணுக்கும் வித்தியாசப்படலாம். நாம் பிரதேச சபைக்கு முதன்

முதலில் சோடியம் லாம்புகள் பூட்டியவர்களாக பெருமைப்பட்டவர்கள். அந்தக் காலத்தில் Municipality இனை தவிர வேறு எங்கும் சோடியம் மின்குமிழ்கள் பொருத்தப்படவில்லை. இன்று LED மின்விளக்குகள் பொருத்துவது Fashion ஆக மாறிவிட்டது என்று சொல்லலாம். என்னைப் பொருத்தமட்டில் தெருவிளக்கு தூண்களில் கட்டப்படும் போது LED மின்விளக்குகள் பொருத்தமற்றது என்பதுதான் எனது தனிப்பட்ட கருத்து. நிச்சயமாக தெருவிளக்குகள் எல்லாம் ஒரு வகையில் இருப்பது அழகு. ஆனால் அந்த அழகை மற்றவர்களுக்கு எரிச்சலாக அல்லது மாவடிப்பள்ளியில் ஒவ்வொரு தூணுக்கும் மின்குமிழ் போட்டமாதிரி மற்ற இனங்கள் எம்மை வீண் செய்பவர்கள் என்று இல்லாமல் நீங்கள் மின்சார சபையுடன் கதைத்து; ஏனென்றால் சென்ற மாதம் மின்சார சபை ஒரு கணக்கெடுப்பு எடுத்தது. அது ஜனாதிபதி செயலகத்தில் இருந்து வந்த பணிப்புரையின் பெயரில் ஒவ்வொரு பிரதேச சபை எல்லைக்குள்ளும் என்ன என்ன மின்குமிழ்கள், எப்படியான மின்குமிழ்கள் பொருத்தப்பட்டிருக்கின்றது என்று ஒரு தேசிய ரீதியில் அவர்கள் Standardisation முயற்சியில் இருக்கின்றார்கள். இவை எல்லாவற்றையும் உள்வாங்கி செய்வதில் எந்தப் பிரச்சினையும் இருக்காது.

நிதி என்று வரும் போது உங்களுக்கு தெரியும் இன்று அரசும் திணருகின்றது, உலகமும் திணருகின்றது. புதிதாக எந்த ஒதுக்கீடுகளும் சபைகளுக்கு நாளாந்த நடவடிக்கைகளை தவிர வேறு அபிவிருத்தி வேலைகளுக்கும் வருகின்ற சாத்தியம் குறைவு. அதன் பின்னரும் 2021 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டம் நவம்பர் மாதம் நிச்சயமாக அங்கீகரிக்கப்படும். அதன் பின் உங்களுக்கு தெரியும் இவ் வருட வேலைகள் ஆரம்பிப்பது மார்ச், ஏப்றில் இல் தான் நிதிகள் வெளிவரும். அதனால் எமக்கு இந்த சபைக்கு பாரிய பொறுப்பு இருக்கின்றது. எல்லோர் கண்ணிலும் இந்த சபையில் பணம் இருக்கின்றது. அப் பணத்தை செலவளிக்க வேண்டும் என்பது, அது எல்லோருக்கும் வரும் ஆசை. ஆனால் இந்த சபையில் நாம் நமது ஊழியர்கள் மூலம் ஊருக்கு செய்யும் சேவைகளை முன்வைத்துதான் இச் சபையை நடாத்தி வருகின்றோம்.

ஒவ்வொரு மாதமும் ஆகக் குறைந்த செலவீனம் 35 இலட்சங்கள் தேவைப்படுகின்றது. எமது நிரந்தரமற்ற ஊழியர்கள், வாகன நடத்தல்கள், நீர், மின்சார இணைப்புகள் போன்ற நாளாந்த நடவடிக்கைகளுக்கு தேவைப்படுகின்றது. ஏறத்தாள என்னுடைய கணிப்பின் படி 07 மாதமாவது எமக்கு தேவைப்படும். இந்த அரசு உள்ளூராட்சியை வித்தியாசமான முறையில் பார்க்கலாம். 2010 ஆம் ஆண்டு அரசு அந்த நோக்கத்தில்தான் உள்ளூராட்சி மன்றங்களுக்கு உதவியது. அவ்வாறு எதிர்பார்த்து நாம் நமது செலவீனங்களை மிகவும் கவனமாக செயற்படுத்த வேண்டும். ஏனென்றால் 94 குடும்பங்கள் நம்மை நம்பி வாழுகின்றது. அதை கவனத்தில் எடுக்க வேண்டும். செலவளிப்பது இலேசு, சேர்ப்பது கஸ்டம். இவ் வருடத்தின் நிதிகள் 08 மாதத்திற்குள் 35%, 45% இற்கு மேல் நமக்கு வரவில்லை. ஆனால் முத்திரைப் பணமும், நீதிமன்ற பணமும் ஓரளவுக்கு வந்துள்ளது. நிதி முகாமைத்துவம் தவிசாளரின் நேரடிப் பொறுப்பு. அதனால் நிதி பாவனையில் நாம் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். எல்லோரும் விரும்பியவாறு செயற்படுவது கஸ்டம் என்பதை நீங்கள் காலப்போக்கில் உணர்வீர்கள்.

இச் சந்தர்ப்பத்தில் நீங்கள் எனக்கு சில நிமிடங்கள் தருவீர்களானால் இந்த 30வது சபையில் ஏறத்தாள 29 மாதங்கள் நான் உங்களினால் தெரிவு செய்யப்பட்ட தவிசாளராக இந்த சபைக்கு தலைமை தாங்கி இருக்கின்றேன். அந்தக் காலத்தில் நமக்குள் தனிப்பட்ட கருத்து முரண்பாடுகள் இருந்திருக்கலாம். அது இயல்பு. ஆனால் நீங்கள் தந்த அந்த கௌரவத்தை நான் காப்பாற்ற வேண்டும் என்ற பிடிவாதத்தினால் உங்களின் சில வேண்டுகோள்களை நிராகரித்திருக்கலாம் அல்லது கவனிக்காமல் இருந்திருக்கலாம். அவை எல்லாம் செய்தது நல்ல நோக்கத்தோடு ஆகும். வேறு எனக்கும் எந்தவொரு கௌரவ உறுப்பினர்களுக்கும் தனிப்பட்ட பிரச்சினைகள் இல்லை. 29 மாதமும் விரும்பி, விரும்பாமல் எனக்கு தந்த கௌரவத்திற்கும், ஒத்துழைப்பிற்கும் கௌரவ உறுப்பினர்களுக்கும், சபை ஊழியர்கள் எல்லோருக்கும் நன்றி கூற இச் சந்தர்ப்பத்தை பாவித்து, சம்மாந்துறை பிரதேச சபையின் 2011 ஆம் ஆண்டில் இருந்து இன்று வரை இந்த நாடு முழுவதும் பேசப்படும். ஒரு முண்ணுதாரணமாக காட்டப்படும் சபையாக இயங்கி வந்திருக்கின்றது. அது தொடர வேண்டும். நானும் ஒரு சாதாரண உறுப்பினராக இன்று இந்த அமர்வுக்கு வருகை

தந்ததற்கு காரணம் பட்டம் பதவிகள் எல்லாம் இறைவன் நமக்கு தருகின்ற கொடை, சோதனை. அதை தாங்கக் கூடிய சக்திகளும் மனக் கட்டுப்பாடும் இல்லாவிட்டால் நாம் மக்களின் சேவகர்களாக இருக்க முடியாது. கட்சி அரசியல் இந்த சபைக்குள் வரக்கூடாது என்பது நான் ஆரம்பத்தில் இருந்து பிடிவாதமாக மேற்கொள்ளும் ஒரு விடயம். நான் ஒரு வகையில் மகிழ்ச்சியடைகின்றேன். ஆளும் கட்சியின் ஒரு உறுப்பினர் அல்லது ஆளும் கட்சியின் கூட்டு கட்சியின் ஒரு உறுப்பினர் இன்று தவிசாளராக இருக்கின்றார். ஒரு வகையில் அது ஒரு வரப்பிரசாதம். ஆனால் நாம் கட்சி அரசியல் இந்த சபைக்குள் கொண்டு வருவோமானால் நிச்சயமாக நாம் இவ்வளவு காலமும் காப்பாற்றி வந்த நற் பெயரை இழக்கும் சந்தர்ப்பங்கள் வரலாம். இவை எல்லாவற்றையும் நீங்கள் என்னோடு 2011ம் ஆண்டில் இருந்து இச் சபையின் உறுப்பினராக இருக்கின்றீர்கள். 05 வருடங்கள் ஒரு அணியிலும் இந்த 29 மாதமும் மாற்றுக்கட்சியாக இருந்தாலும் ஒரு ஆளும் அணியில் இருந்து நாம் செயற்பட்டு வந்திருக்கின்றோம். அதை மனதில் கொண்டு இந்த சபையின் கௌரவத்தையும், இந்த ஊரின் கௌரவத்தையும் பேணுவதற்கு நாங்கள் எப்போதும் உறுதுணையாக இருப்போம். இதை நீங்கள் மனதில் வைத்து செயற்படுவீர்கள் என்று கேட்டு, இந்த சந்தர்ப்பத்தை எனக்கு வழங்கியதற்காக நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

**கௌரவ பதில் தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**

LED மின்குமிழ் விடயத்தில் ஒரு தகப்பனிடம் ஒரு பிள்ளை ஒரு பொருளை கேட்டு அடம்பிடிப்பது போல்தான் இது. ஏனென்றால் என்னுடைய நீண்ட கால கனவு. உங்களால்தான் எனக்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கின்றது. இச் சபையில் இன்று சமூகமளித்தது கூட எங்களுக்கு ஒரு பெரிய விடயம். அதை நாங்கள் உங்களை கன்னியப்படுத்தியவனாக இந்த சபை மின்குமிழ் விடயத்தில் கொள்வனவு செய்வதற்கு ஏகமனதாக அங்கீகரிக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசையும், அவாவும் ஆகும்.

**கௌரவ உறுப்பினர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**

கௌரவ பதில் தவிசாளர் அவர்களே, LED பொருத்துவதானால் முதலில் சம்மாந்துறை நகரின் 04 வீதிகளையும் அழகுபடுத்திவிட்டு மின்விளக்குகளை பொருத்துங்கள் என்பது எனது பணிவான வேண்டுகோள்.

**கௌரவ பதில் தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**

இன்னும் எமக்கு தெளிவில்லை. நாம் இந்த சபையை பிரித்து பார்க்கக் கூடாது. சபையில் இன்னுமொரு தவிசாளர்தான் தெரிவு செய்யப்பட்டு வரப்போகின்றார். இன்றைய சபையில் எல்லோரும் தவிசாளராக நினைத்துக் கொள்வோம். அந்த அடிப்படையில் நாம் ஒற்றுமையாக செயற்பட்டு நாங்கள் எதிரே வருகின்ற சபையில் யார் தவிசாளராக வந்தாலும் இவைகளை குறைத்து இதில் எவ்வளவோ விடயங்கள் இருக்கின்றது. வாகனத்தைப் பற்றி இதில் சொல்லவில்லை, ஊழியர்களைப் பற்றி இதில் சொல்லவில்லை ஏனென்றால் அதை நேரடியாக தவிசாளர் பார்க்கட்டும். அவரின் பணியில் சுமையை குறைத்து அவர் எங்களுக்கு ஒரு மேலான ஒருவராக இருந்து மனதில் உதித்ததை ஏனையவர்கள் படுகின்ற கஸ்டத்தை பார்த்துதான் இம் முடிவை எடுத்தோம். வேறு எவருக்கும் பாதகம், சாதகம் என்று கருதவும் கூடாது. உதாரணமாக இன்றைக்கு நாங்கள் 03 பேர் ஒரு வட்டாரத்திற்குள் இருக்கின்றோம். எங்களது வட்டாரத்தில் சில வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஒரு முரண்பாடு கூட இல்லை. கௌரவ உறுப்பினர் றியாஸ் அவர்கள் எத்தனையோ வேலைகளுக்கு அழைத்திருப்பார். நான் அவரிடம் நீங்கள் எடுக்கின்ற முடிவுகளுக்கு நான் எந்த மாற்றமும் இல்லை என்று கூறியிருக்கின்றேன். அதே போல் கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்கள் இருக்கின்றார்.

நாங்கள் நன்றாக தெரிந்து கொள்ளவேண்டும் சென்னல் கிராமம் 02 இனையும், 06ம் வட்டாரத்தினையும் ஒப்பீடு செய்யலாமா? கல்லரிச்சலில் எத்தனையோ இடங்களில் மின்குமிழ் போடவேண்டி இருக்கின்றது. கல்லரிச்சலினையும் ஏனைய வட்டாரங்களையும் ஒப்பிடலாமா? இல்லை. நாங்கள் தேவை அறிந்து பகிர்வீடு செய்ய வேண்டும். நான் 06 வருடங்கள் இருந்தேன் ஒரு சிறிய வீண்விரயம் இல்லை. நான் 29 வருடம் ஆசிரியராக சேவையில் இருந்து விலகின்ற

போது இது செய்து தரலாமா என்று, என்னுடைய அரசியலில் நான் அவ்வாறு செய்த என்று நிறுபித்தால் இந்த நிமிடமே பதவி விலக தயாராக இருக்கின்றேன். நாங்கள் அப்படித்தான் எல்லோரும் வாழ்ந்தோம். என்னைப்பற்றி நான் சொல்வதும் அழகு அல்ல. எனவே இந்த சந்தர்ப்பம் எங்களுக்கு வழங்கப்பட்டதை நாங்கள் எல்லோரும் சேர்ந்து செய்ய வேண்டும். CEB எம்மிடம்வந்து எப்படி கேட்பது. நமக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட I Project இல் கூட இட நெருக்கத்தை விடாமல் இருக்கின்றதை நாடி இந்த தெருவிற்கு செலவளிக்க வேண்டிய பணம் ஏதோ ஒரு தெருவில் 07 குடும்பங்கள் இருக்கின்ற இடத்தில் 4Km சரியான அளவிற்கு போடப்படுகின்றது.

நாங்கள் வாழ்வது குறுகிய காலம். நாம் தேவைப்படும் இடத்திற்குதான் பூட்டப் போகின்றோம். எந்தவொரு பொதுமக்களும் அதை எதிர்ப்பது நியாயமும் இல்லை. எல்லோரும் இதற்கு அங்கீகாரம் வழங்கி குறுகிய காலத்திற்குள் பொருத்த வேண்டும் என்பதுதான் எனது ஆசை. பதவி வரும் போகும் அது இறைவனால் வழங்கப்படுவது. நானே நினைக்கவில்லை உங்களது மனதில் ஏற்பட்ட சிறு தாக்கத்தால் வந்த விணைதான் நான் இன்றைக்கு இங்கு இருக்கின்றேன். முதலில் இறைவனுக்கும் அடுத்த படியாக உங்களுக்கும்தான் நன்றியை கூறலாம் வேறு யாருக்கும் செலுத்த இயலாது. எனவே கிடைத்த சந்தர்ப்பத்தை நாங்களும் பயன்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் தான் இந்த கோரிக்கையை முன்வைத்திருக்கின்றேன். சபையும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள். எனவே செயலாளர் அவர்கள் உடனடியாக அந்த அங்கீகாரத்தை எழுதி ஏனைய விடயங்களை பேசுவதற்கு உங்களை கேட்டுக் கொள்கின்றேன்.

## தீர்மானம் - 04/30/09

பிரதான பாதைகளிலுள்ள சோடியம் மற்றும் CFL மின் விளக்குகளை அகற்றி, அவற்றிற்குப் பதிலாகவும், தேவையான LED மின் விளக்குகள் பொருத்துவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ பதில் தவிசாளர் | ஏ.அச்சி முஹம்மட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஐ.எல்.நஜீம் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**

கௌரவ பதில் தவிசாளர் அவர்களே, இங்கு 10 வட்டாரங்கள் சம்மாந்துறையில் இருக்கின்றது. எங்களுடைய எண்ணம் சம்மாந்துறை கிராமம் என்று சொல்லாமல் சம்மாந்துறை நகரம் என்று சொல்வதற்காகத்தான் இந்த LED மின்குமிழ்களை மத்தி என்ற வகையில் மணிக்கூட்டு கோபுரம் இருக்கின்றது அதன் 04 பக்கத்திலும் 04 வகையான பாதைகள் அமைக்கப்பட்டிருக்கின்றது. அப் பாதைகளில் 10, 10 என்ற அடிப்படையிலாவது நீங்கள் இந்த மின் கம்பங்களை நாட்டினால் நல்லது என்று நினைக்கின்றேன். அடுத்த விடயம் எமது முன்னாள் தவிசாளர் அவர்கள் சம்மாந்துறை பிரதேச சபையை மிகவும் அழகாகவும் ஒன்றிணைந்தும் நடாத்தி இருக்கின்றார். அதற்கு நான் முதற்கண் எல்லோரும் நன்றிக்கடன் கூறப்பட்டவர்களாக இருக்கின்றோம். ஆனால் ஒரு கவலைக்குரிய விடயம் என்னவென்றால் எங்களுடைய முன்னாள் தவிசாளர் அவர்கள் விலகிய விடயம் பற்றி எங்களுக்கு எந்த அறிவிப்பும் இல்லை. நாங்கள் எங்களுடைய Facebook இல்தான் அறிந்து கொண்டோம். இந்த சபையின் ஊடாக அது சம்மந்தமாக எங்களுக்கு எந்த அறிவிப்பும் அறிவிக்கப்படவில்லை. அதையும் நான் கவலையுடன் இந்த இடத்தில் கூறுகின்றேன்.

கௌரவ பதில் தவிசாளர் அவர்களே, உங்களால் கூறப்பட்ட விடயங்கள் வரவேற்கக்கூடியது. எங்கள் 20 பேருக்கும் பதவி வழங்க இருக்கின்றீர்கள் என்று நினைக்க எங்களுக்கு சந்தோசமாக இருக்கின்றது. எங்களிடமும் ஒரு ஆளுமை ஒன்று தரப்போகின்றீர்கள் அதை நாங்கள் ஆழ்ந்து பார்க்க போகின்றோம். எங்களுக்கு எவ்வளவு திறமை இருக்கின்றது, எங்களது திறமையை அளக்கும் மானியாகவும் நாங்கள் எடுத்துக் கொள்ளலாம் என்று நினைக்கின்றேன். இன்சா

அல்லாஹ் உங்களால் கிடைக்கப்பெறுகின்ற பதவிகளை எங்கள் 20 பேருக்கும் முடியும் என்றுதான் பதில் இருக்குமே தவிர முடியாது என்ற பதில் இல்லை. நாங்கள் ஆண்களாக இருந்தாலும் சரி பெண்களாக இருந்தாலும் சரி எங்களால் வயலுக்குள் இறங்கி வேளாண்மை செய்யக்கூடிய சக்தி இருக்கின்றது என்று கூற விரும்புகின்றேன். அடுத்த விடயம் எமது கௌரவ முன்னாள் உப தவிசாளர் அவர்கள் கூறியதற்கு இணங்க எமது பொது நூலகத்திற்கு வெள்ளை அடிப்பதற்கு மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கின்றோம். நிதி இல்லாவிட்டாலும் எங்களால் இயன்ற உதவிகளை செய்ய முடியும் என கூறிக்கொள்வதோடு,

உங்களுக்கு இன்னுமொரு விடயத்தை கூற விரும்புகின்றேன். அதாவது சம்மாந்துறையில் அதிகமான பாலர் பாடசாலைகள் இருக்கின்றது. அப் பாலர் பாடசாலைகளுக்கு இக்கட்டான நிலை காணப்படுகின்றது. பாலர் பாடசாலைகளில் வசதி கூடிய மாணவர்கள் கற்கின்ற பாடசாலைகளும் இருக்கின்றது, வசதி குறைந்தவர்கள் கற்கின்ற மாணவர்களும் இருக்கின்றார்கள். ஆனால் இச் சந்தர்ப்பத்தில் பாலர் பாடசாலைகளை நடாத்த வேண்டும் என்றால் ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் வெப்பமானி இருக்க வேண்டும். அதே போல் கை கழுவுகின்ற வசதியும் இருக்க வேண்டும். கை கழுவுகின்ற வசதிகளை உருவாக்க முடியும். ஆனால் வெப்பமானியை எடுத்துக் கொள்வது மிகவும் கஸ்டமான நிலை. ஆனால் வசதி கூடிய பெற்றோரிடம் இருந்து பணத்தை அறவிட்டு வெப்பமானிகளை கொள்வனவு செய்ய முடியும். ஆனால் வசதி குறைந்த பாடசாலைகளில் பெற்றோர்களுக்கு அப் பணத்தை வழங்கவும் முடியாது. 08 மாதம் பாலர் பாடசாலை மாணவர்களுக்கு கல்வியே இல்லை. இருக்கின்ற 04 மாதங்களுக்கும் அவர்களுக்கு தேவையான அதாவது ஆண்டு ஒன்றுக்கு தேவையான கல்வியை அப் பாடசாலை மாணவர்களுக்கு வழங்க வேண்டும். அந்த இக்கட்டான சூழ்நிலையில்தான் இப் பாலர் பாடசாலைகள் இருக்கின்றது. உங்களால் முடிந்தால் வெளியில் ஏதாவது நிதி எடுக்க முடிந்தால் சம்மாந்துறையில் இருக்கின்ற பாலர் பாடசாலைகளை கவனத்தில் எடுத்து அந்த வெப்பமானிகளை வழங்கினால் நல்லது என நினைக்கின்றேன்.

சம்மாந்துறையில் ஈச்ச மரங்கள் ஒவ்வொரு பொது இடத்திலும் இருக்கின்றது. அந்த ஈச்ச மரங்களை நாங்கள் முக்கியமாக பாதுகாக்க வேண்டும். ஏனென்றால் எங்களுடைய கலை கலாசாரங்கள் எல்லாம் அழிந்தே போகின்றது. இது எங்களது மதம் சார்ந்த மரம் ஒன்று. எனவே எவ்வாறு தமிழ் இன மதங்கள் அவர்களுடைய துளசி மரத்தை பாதுகாக்கின்றார்களோ அதே போன்று நாமும் பாதுகாக்க வேண்டும். இச் சபையில் அதிகளவான விடயங்களை நாம் நிறைவேற்ற வேண்டும் என்று இருந்த போது சில விடயங்கள் தவறு விடப்படுகின்றது. அதில் ஒன்றுதான் எங்களுடைய வட்டாரத்தில் நான் பல தடைவ மின் கம்பத்தைப் பற்றி நான் கூறியிருக்கின்றேன். அதற்கு கடிதம் அனுப்பியிருக்கின்றார்கள். ஆனால் என்ன நடந்த என்று எங்களுக்கு இன்னும் அறிவிப்பு தரவில்லை. ஆனால் இனி எங்களுக்கு அவ்வாறான தேவை இல்லை. ஏனென்றால் எங்களுடைய வடிகான் ஒன்று அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அவ் அமைப்பின் ஊடாக மின்கம்பத்தை நிரப்பிக் கொண்டு வருகின்றோம். முழு மூச்சாக அவ்விடத்தில் நான் நின்று அவ் வேலைகளை செய்து கொண்டு இருக்கின்றேன்.

ஆனால் ஏனைய வட்டாரத்தில் விடுபட்ட வேலைகளை கட்டாயமாக செய்து கொடுக்க வேண்டும். அதில் ஒன்றுதான் சென்ற 4ம் மாதம் 08 ஆந் திகதி எங்களுடைய கௌரவ பௌசுள்ளாஹ் அவர்களுடைய வட்டாரத்தில் Dialog Tower அமைப்பதற்கு அனுமதி கொடுப்பதற்காக அவர் எல்லா இடத்திலும் அனுமதியை கொண்டுவந்தும் கூட நீங்கள் அனுமதியோ அல்லது மறுப்போ எந்தக் கடிதமும் கொடுக்கவில்லை. அது சம்மந்தமாகவும் நீங்கள் அறிவிப்பு தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டு, ஒரு நாள் என்று சொல்லாமல் அடுத்த தவிசாளர் வரும் வரைக்கும் எங்களுடைய இந்த சபையை எங்களது முன்னாள் தவிசாளர் எவ்வாறு ஒற்றுமையாக இந்த சபையை நடத்தினாரோ அவ்வாறு இந்த சபையை நடாத்துவீர்கள் என்று நம்புகின்றேன். இங்கு முன்னாள் தவிசாளர் அவர்கள் இருக்கின்றார் அந்த வகையில் தவிசாளர் என்ற பதவியில் இருக்கும் போது நான் அவருக்கு ஏதாவது வேதனையாக ஏதும் செய்திருந்தால் அவர் முன்னிலையில் மன்னிப்பு கேட்டு எனது உரையை முடித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்கள் பேசும் போது எப்போதும் என்னைத் தொடாமல் பேச முடியாது. அது ஒரு பிரச்சினை. என் பிள்ளைக்கு சமன் என்ற படியால் அது இருக்கலாம். 2020.08.04 ஆந் திகதி காலை 8.56 இற்கு நான் உத்தியோகபூர்வ Whatsapp Group இல் அனுப்பி ஒரு மணித்தியாலயத்திற்குள் பதில் பதிவையும் அனுப்பி விட்டார். அப்படி இருந்தும் அவர் தற்போது அறிவித்தல் தரவில்லை என்று கூறுவது மனவருத்தமான விடயம். அதை மன்னித்தவனாக விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**
நான் நிர்வாகத்தைதான் கூறினேன்.

**கௌரவ பதில் தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
பாலர் பாடசாலைகளை ஆரம்பிப்பது என்றால், அரசு அனுமதி வருகின்ற போது அதற்கான ஏற்பாடுகள் செய்வார்கள். அவ்வாறு இல்லாமல் திறக்கவும் இயலாது.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**
கௌரவ பதில் தவிசாளர் அவர்களே, பிரதேச செயலகத்தில் சென்ற கிழமை பாலர் பாடசாலைகள் அனைவரையும் அழைத்து இவ் விளக்கத்தைப் பற்றி கூறியிருக்கின்றார்கள். வெப்பமானிகள், கை கழுவும் உபகரணம் என்பவற்றை எடுக்க வேண்டும் என்று, ஆனால் பிரதேச செயலகத்தினால் 10 வெப்பமானிகள் வழங்கி இருக்கின்றார்கள். அது பாடசாலையில் நடைபெறுகின்ற பாலர் பாடசாலைகளுக்கு மாத்திரம் வழங்கி இருக்கின்றார்கள். உதாரணத்திற்கு எங்களுடைய பாலர் பாடசாலையை எடுத்துக் கொண்டால் 02 வசதி கூடிய இடமும், 01 அறவே வசதி இல்லாத மாத வருமானமும் எடுக்காத இடம் ஆகும். அந்த இடத்தில் பெற்றோர்களிடமும் வாங்க இயலாத நிலமை. இதே போல் பல பாடசாலைகள் இங்கு இருக்கின்றது.

**கௌரவ பதில் தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
பாலர் பாடசாலைகளும் ஒரு ஒழுங்கமைப்பு, கட்டமைப்பில்தான் இருக்கின்றது. நீங்கள் இக் கோரிக்கையை பிரதேச செயலாளரிடம் கொடுத்துவிட்டு அவர்களால் இயலாத பட்சத்தில் அதை செய்யலாம். Tower விடயத்தில் நான் நேரடியாக சென்று பார்த்தேன். அருகில் இருக்கின்ற ஒருவர் வீடு கட்டப் போனவுடன் Tower ஆல் தடுத்து இருக்கின்றார். அது சபையில்தான் போடுபட்டுள்ளது. அவர் கூறிய காரணம் Tower இற்கு Strong ஆன அத்திவாரம் இல்லை என்று, Tower இனை அமைப்பவர்கள் Strong இல்லாமல் செய்வதில் அர்த்தமில்லை. எமது தொழில்நுட்ப உத்தியோகத்தரிடம் கேட்ட போது புறாவித்தியா கூட அதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்று, அவர் கூறினார் ஒரு இடத்திலும் இந்த நடைமுறை இல்லை. அதற்கு நான் கூறினேன் உங்களுக்கு எதிராக ஒரு கடிதம் வந்தால் உரிய நடைமுறையில் செய்யவில்லை என்றால் அதற்கு நாங்கள் ஒப்பம் இட இயலாது. எனவே அப்படி ஒன்று இருந்தால் நீங்கள் கேளுங்கள் அதற்கு ஒரு ஆபத்தும் இல்லை. நான் பதில் தவிசாளராக இருக்கின்ற படியால் பதில் சொல்கிறேன். எந்த இடத்திற்கு சென்று தடங்கள் வந்தாலும் நாம் அதற்கு உதவியாக இருப்போம் என்று அவர் சார்பாக கூறி இருக்கின்றோம். எனவே தற்போது நீங்கள் நினைப்பது போல் சபையால் அது பிற்போடப்படுகின்றது என்று இல்லை.

இந்த சந்தர்ப்பத்தில் இன்னுமொரு விடயத்தை நான் உங்களுக்கு கூற வேண்டும். நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் நிலையம் சம்மாந்துறை என்று, பிரதான வீதியோரங்களில் நடைபாதை வியாபார நிலையங்களை அகற்றல், பிரதேச சபை எல்லைக்குள் வீதி அபிவிருத்தி சபை ஆளுகையின் கீழ் உள்ள சம்மாந்துறை, மல்காம்பிட்டி, தீகவாபி SMD வீதி, பிரதான வீதியோரங்களில் அமைந்துள்ள நடைபாதை வியாபாரிகளால் போக்குவரத்து தடை ஏற்படுகின்றது. மேலும் நிரந்தர கடை உரிமையாளர்களினால் விற்பனை பொருட்களை காட்சிப்படுத்துவதற்காக நடைபாதை முன்வைப்பதனாலும் வாகன ஓட்டுனர்ளும், பாதசாரிகளும், பாடசாலை மாணவர்களுக்கும் இடைஞ்சலாக இருக்கின்ற வாய்ப்புகள் அதிகமாக காணப்படுகின்றன. எனவே

மேற்குறித்த இடங்களில் காணப்படும் நடைபாதை வியாபாரிகள் மற்றும் கடை உரிமையாளர்களின் பொருட்களை எதிர்வரும் 2020.08.19 ஆந் திகதி மு.ப. 09 மணிக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை , பிரதேச சபை பொலிஸ் உதவியோடு இவைகளை அகற்றுவதற்கும், நடவடிக்கை மேற்கொள்வதற்கும் தேவையான பொலிஸ் நடவடிக்கைகளை கேட்டுக் கொள்கின்றேன். RDA இன் Engineer அனுப்பி இருக்கின்றார். இவ் விடயம் உங்களுக்கு தெரிந்திருக்க வேண்டும் என்பதற்காக இதை உங்களுக்கு தெரியப்படுத்துகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம்.ரீ.பௌசுள்ளாஹ் அவர்கள்:**
கௌரவ பதில் தவிசாளர் அவர்களே, Dialog விடயமாக அயலவர்களின் விருப்பத்திற்கமைய பெரும்பான்மை இருக்கும் என்றால் கொடுக்கலாம் என்றுதான் தீர்மானம் எடுத்தோம். அத் தீர்மானத்தின் படி கூடுதலாக அயலவர்கள் கொடுக்கலாம் என்றும் 07 பேர் கொடுக்க இயலாது என்றும் கூறினார்கள். காரணம்.

**கௌரவ பதில் தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் அவர்களே, நான் வந்துதான் அதைப் பார்த்தேன். எமது விடயம் முடிந்து விட்டது. ஆனால் தற்போது புதிய முறையில் அதற்கான அனுமதி பெற வேண்டும். ஏற்கனவே இந்த நடைமுறைகள் இல்லாத காலத்தில் அனுமதி வழங்கி இருந்தால் அது வேறு விடயம். தற்போது எதிர்ப்புக் கடிதமும் வந்த பிறகு தேவையான ஆவணங்களை சமர்ப்பிக்காமல் வழங்கினால் அவ் எதிர்ப்புக் கடிதம் அனுப்பியவருக்கு அது ஒரு வாய்ப்பாக அமைந்து எமது சபையை குற்றம் பிடிக்கலாம். Court இல் நிறுத்தி அதற்கு தண்டனையும் வாங்கி தரலாம்.

**கௌரவ உறுப்பினர் எம்.ரீ.பௌசுள்ளாஹ் அவர்கள்:**
கௌரவ பதில் தவிசாளர் அவர்களே, அந்த எதிர்ப்புக் கடிதம் வந்த பின்னர்தான் பெரும்பான்மை இருக்கின்ற பக்கம் கொடுங்கள் என்று சொல்லி சபை கூடி முடிவு எடுத்தோம்.

**கௌரவ பதில் தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
தற்போது கொடுக்க இயலாது. தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை வைத்து அவ் விடயத்திற்கு புறாவித்தியாலய அறிக்கை எடுத்து வர வேண்டும் என்று கூறியிருக்கின்றார்கள்.

**கௌரவ உறுப்பினர் ஏ.யூசுப் லெப்பை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 4வது சபையின் 30வது கூட்டத்தொடரில் எங்களது முன்னாள் தவிசாளர் கடந்த 29 சபைகளை சிறப்பான முறையில் நடாத்தி பிரதேச சபைக்கு புதிதாக வந்த எங்களைப் போன்ற கௌரவ உறுப்பினர்களை நெறிப்படுத்தி செயற்பட்டதை என்னால் உணர முடிகின்றது. அத்தோடு சிறு சிறு குறைபாடுகள் ஏற்பட்டிருக்கும். அது எல்லோர் செயற்பாட்டிலும் வரக்கூடிய ஒன்றாக இருக்கின்றது. தற்போது ஏற்பட்டிருக்கின்ற தவிசாளர் மாற்றத்தின் மூலம் எங்களுக்குள் இருந்தும் தவிசாளர் பொறுப்பை நடத்தக்கூடிய ஒரு திறமையான தவிசாளராக நீங்கள் இருந்து கொண்டிருப்பதையிட்டு நான் மிகவும் சந்தோசப்படுகின்றேன். அந்த அடிப்படையில் கடந்த காலங்களில் சம்மாந்துறை பிரதேச சபை என்பது ஒரு வித்தியாசமான ஒரு குறிப்பிடத்தக்க அடிப்படையில் சிறப்பாக செயற்பட்டிருப்பதை நாங்கள் எல்லோரும் சான்றுகளாக இருந்து கொண்டிருக்கின்றோம். அடுத்த சபையின் தவிசாளர் வரும் வரை என்று நீங்கள் கூறியிருக்கின்றீர்கள். எவ்வாறு இது ஏற்படும் என்பதை காலம்தான் பதில் சொல்லும் என கருதுகின்றேன். இந்த அடிப்படையில் மேலும் எவ்வாறு இந்த சபை கடந்த காலங்களில் இருந்து ஒற்றுமையோடு சிறப்பாக செயற்பட்டிருக்கின்றது. அதற்கமைவாக தங்களது சிறப்பான வழி நடாத்தலை நாங்கள் கௌரவ உறுப்பினர்களாகிய சகலரும் எதிர்பார்த்த அடிப்படையில் இருந்து கொண்டிருக்கின்றோம். அது நிச்சயமாக உங்களிடத்தில் இருக்கும் என கருதுகின்றோம்.

சம்மாந்துறை பிரதேசத்தில் மக்கள் பிரதிநிதிகள் என்று கூறக்கூடியவர்களாக இந்த சபையின் உறுப்பினர்கள் மாத்திரம்தான் சம்மாந்துறை பிரதேசத்தில் இருக்கின்றார்கள் என்பதை நான் மிகவும் கவலையோடும், கருசணையோடும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். அந்த அடிப்படையில்

சம்மாந்துறையின் தலைமகனாக இருக்கின்ற தவிசாளர் அவர்கள் இந்த ஊரின் அனைத்து செயற்பாடுகளையும், குறைபாடுகளையும் முன்னெடுத்து செல்லப்பட வேண்டும் என்பதுதான் எனது பேர் அவாவாக இருக்கின்றது. அவாமட்டுமல்ல எங்களுக்கு வாக்களித்து இந்த ஊரை, இந்த சபையை அமைத்து தந்த பொதுமக்களின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது. எனவே எவ்வாறான பிரச்சினைகளாக இருந்தாலும் திறமையான முறையில் இந்த சபைக்கு தற்காலிக தவிசாளராக இருந்தாலும் சரி அல்லது மாற்றம் பெறுகின்ற தவிசாளராக இருந்தாலும் சரி தவிசாளர் ஆசனத்தில் இருக்கின்ற கௌரவ தவிசாளர் அவர்கள் யாராக இருந்தாலும் ஊரை பொருத்தமட்டில் முன்னெடுக்க வேண்டிய தலையாய கடமைகள் கூடுதலாக இருக்கின்றது. அதிக பொறுப்புக்கள் தவிசாளர்களிடத்தில் காலகட்டத்தின் காரணமாக முன்வைக்கப்பட்டிருக்கின்றது என்பதை நாங்கள் எல்லோரும் அறிவோம்.

அந்த அடிப்படையில் அம்பாரை மாவட்ட பிரதேச அபிவிருத்தி சபைக் கூட்டம் என்றால் நாங்கள் எல்லோரும் அறிந்திருக்கின்றோம் அங்கு பல கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் பல சபைகளின் தவிசாளர்களும் சமூகமளித்து அந்த சபையின் ஊடாக இந்த மாவட்டத்திற்கு ஏற்படுத்தப்படுகின்ற அபிவிருத்தியை மேற்கொள்கின்ற ஒரு இடமாக இருக்கின்றது. அந்த இடத்தில் சம்மாந்துறையின் பிரதிநிதியாக இந்த சம்மாந்துறையின் தவிசாளர்தான் இயங்குவார் என்பதில் எதிர்காலத்தில் எங்களுக்கு தெளிவான ஒரு முடிவு ஏற்பட்டிருக்கின்றது. எனவே அதன் அடிப்படையில் செயற்பட வேண்டும் என்பதுதான் எனது கோரிக்கையாக இருக்கின்றது. அடுத்ததாக எமது பிரதேச சபையின் சார்பாக Digital விளம்பரப் பலகை இடப்பட்டிருக்கின்றது. உண்மையிலே ஒரு முன்னேற்றத்தின் ஒரு தடயமாக நாங்கள் இந்த ஊரில் காணுகின்றோம். பாராட்ட வேண்டும்.

நான் ஒரு கோரிக்கையை முன்வைக்கின்றேன். அதாவது இன்று சம்மாந்துறை நகர் பிரதேசம், கிராம பிரதேசம் என்று இருக்கின்றது. அதில் மலசலகூடங்கள் நிரம்பி அசௌகரியங்களை மக்களுக்கு ஏற்படுத்தி பெரிய பிரச்சினைகளை உருவாக்குகின்றது. அதனை துப்பரவு செய்வதற்காக எமது பிரதேச சபையின் சார்பாக அதற்குரிய வாகனம், செயலணி ஒன்றை உருவாக்கி அதனை நடைமுறைக்கு கொண்டுவர வேண்டும் என்பது எனது சபை சார்பாக நான் 30வது கூட்டத்தொடரில் முன்வைக்கின்றேன். அது எங்களுக்கு தற்போதே அவசியம் ஏற்பட்டுவிட்டது. ஏனென்றால் இதனை துப்பரவு செய்வதாக இருந்தால் ரூபா 8000.00 எடுக்கின்றார்கள். அதுவும் வெளியூர்களில் இருந்து கொண்டுவர வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் இருக்கின்றது. எனவே சம்மாந்துறையை பொருத்தமட்டில் இங்கு இருக்கின்ற எத்தனையோ மலசலகூட துப்பரவு செய்கின்ற ஏற்பாடுகள் இருக்கின்றது. இதனால் எங்களுக்கு எந்தவிதமான நட்டம் ஏற்படுவதற்கு இல்லை. அதற்காக செலவீடு செய்கின்ற முதலீடுகளில் எந்தவிதமான நட்டமும் சபைக்கு ஏற்படாது. எதிர்காலத்தில் பொதுமக்களுக்கு அது ஒரு முக்கியமான சேவையாக கருதப்படும் என்று கூறிக்கொள்கின்றேன்.

சம்மாந்துறை பிரதேசத்தில் பெருமளவு பிரதேசங்கள் நில அளவை திணைக்களத்தினால் அளவீடு செய்யப்பட்டு Surveyor Planning செய்யப்பட்டு விட்டது. இருந்த போதிலும் சம்மாந்துறையின் மத்தியில் இருக்கின்ற புளக் ஜே கிழக்கு முதலாம் பிரதேசம் இதுவரை காலமும் Surveyor Planning செய்யப்படாமல் இருப்பது மிகவும் கவலையான விடயம். சபை சார்பாக கௌரவ தவிசாளர் அவர்களிடம் ஒரு கோரிக்கையாக முன்வைக்கின்றேன். அந்த Surveyor Planning இனை மேற்கொள்ள வேண்டும் என்று, அதற்கு நில அளவை அலுவலகத்திற்கு சபை சார்பாக வேண்டுதலை விட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். அத்தோடு பெரிய பள்ளிவாசல் சந்தியிலும் அம்பாரை 8ம் வீதியும் சபூர்சனச வீதியும் சந்திக்கின்ற பாலங்கள் உடைந்த நிலையில் இருக்கின்றது. நீண்ட நாட்களாக அப் பாலங்கள் திருத்தப்படாமல் இருக்கின்றது. அத் தேவையையும் பொது மக்களுக்கு நிறைவு செய்யப்பட வேண்டும் என்று ஞாபகப்படுத்தியவனாக, ஹிஜ்ரா 1ம் வீதியில் இரு மருங்கிலும் உள்ள வீடுகளில் இருந்து மரங்கள் அதன் கந்துகளை விசாலமாக பாதைகளில் விட்டுறிக்கின்ற படியால் அவ் வீதியில் இருக்கின்ற மின்குமிழ்களில் ஒளி பரந்து பாதைகளுக்கு விழக்கூடிய சந்தர்ப்பம் குறைவாக இருக்கின்ற படியினால் மரக்கிளைகளை வெட்டி துப்பரவு செய்து தருமாறு கேட்டு எனது உரையை முடித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சென்ற எங்களது சபைக் கூட்டத்தில் சகல உறுப்பினர்களுக்குமான வாழ்வாதாரம் என்ற தொகை ஒதுக்கப்பட வேண்டும் என கேட்டுக்கொண்டோம். அதற்கு எமது முன்னாள் தவிசாளர் அவர்கள் தீர்மானத்தினை வழங்கியுள்ளார். அந்த வாழ்வாதாரத்தை தற்போதய காலகட்டத்தில் சகல உறுப்பினர்களுக்கும் வழங்கித்தர வேண்டும் என்று எல்லோர் சார்பாகவும் கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் வீ.ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, முதலாவதாக நம் அனைவர் சார்பாகவும் தெரிவிப்பது, வெளியே வந்து கையொப்பம் இட்ட போது எங்களுக்கான கொடுப்பனவில் ரூபா 3000.00 குறைத்து கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. எனக்கு கிடைக்க வேண்டிய கொடுப்பனவு ரூபா 15000.00 ஆகும். ஆனால் எங்களுக்கு ரூபா 12975.00 இடப்பட்டுள்ளது. அதன் விளக்கம் என்ன என்று தெரியவில்லை.

இரண்டாவது விடயம் மல்வத்தை பொது நூலகத்தை நாங்கள் ஒரு கட்டடத்தை சபை நிதி ஊடாக திருத்தம் செய்து அதன் பணிகள் நிறைவடைந்து இருக்கின்றது. அதனை நூலகத்திற்கு மாற்ற வேண்டி இருக்கின்றது. ஒரு திகதியை அதற்காக ஏற்பாடு செய்து அதனை நாம் சம்பிரதாயபூர்வமாக தேர்தல் காலமாக அதை செய்யவில்லை. தற்போது சம்பிரதாயபூர்வமாக நூலகத்தை திறப்பதற்கான ஒரு ஏற்பாட்டினை சபை ஊடாக செய்ய வேண்டிய கட்டாயம் இருக்கின்றது. அதிலும் எமக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டறிக்கை ஏறக்குறைய 7 இலட்சம் இருந்ததை குறைத்து முன் பகுதி வேலையை செய்வதை தவிர்த்து இருந்தோம். எனவே முன்பகுதி வேலையை செய்வதற்கு சனசமூக நிலையத்தில் போதுமான நிதி இருக்கின்றது. சனசமூக நிலைய நிர்வாகமும் அதற்கு உடன்பட்டது. ஆனால் அதன் மதிப்பீட்டறிக்கை கோரப்பட்டிருந்தது. அதன் மதிப்பீட்டறிக்கை பிரதேச சபை தொழில்நுட்ப உத்தியோகத்தர் தயாரித்து தரும் பட்சத்தில் அதற்கான அங்கீகாரத்தினை கௌரவ தவிசாளரின் சிபார்சுடன் உள்ளூராட்சி ஆணையாளர் அவர்கள் தருவதாக கூறியிருந்தார். அதற்கான ஏற்பாட்டினை செய்து தருமாறு கௌரவ சபையை கேட்டுக் கொள்வதோடு,

கௌரவ உறுப்பினர் யூசுப் லெப்பை அவர்கள் கூறிய விடயம் Gully Bowser உண்மையிலே அத்தியவசியமான விடயம். அதனை சபைக்கு கொள்வனவு செய்வது என்பது மிகச் சிறப்பான விடயம். எனவே அதனை அங்கீகரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, இவ்விடத்தில் நாங்கள் எங்களது 10 வட்டாரங்களினதும் வீதிகள் இருக்கின்றது. அவ் வீதிகளுக்கு பெயர்ப்பலகை இடப்படாமல் இருக்கின்றது. எனவே இந்த இடைப்பட்ட காலத்தில் ஏதோ ஒரு மாற்றத்தை செய்வதானால் அவ் வீதிகளுக்கு பெயரிடுவதை நாங்கள் முன்னெடுத்து செல்வது சிறப்பாக இருக்கும் என நினைக்கின்றேன். அந்த அடிப்படையில் ஒரு வட்டாரத்திற்கு குறைந்தது சபையின் நிதியின் ஊடாக ரூபா 30000.00 நிதி பெற்றுத் தந்தீர்களானால் எங்களுக்கு மேலதிகமாக தேவைப்படும் நிதியினை நாங்கள் தனவந்தர்களிடம் இருந்தோ அல்லது வேறு நிறுவனங்களிடமோ பெற்றுக்கொண்டு எங்களது பிரதேசத்தில் உள்ள வீதிகள் அத்தனையும் ஒரே அமைப்பில் சம்மாந்துறையின் வீதிகள் அனைத்திற்கும் பெயர்ப்பலகை இடுவது சிறப்பாக இருக்கும் என கருதுகின்றேன். அதற்கான அங்கீகாரத்தை பெற்றுத்தருமாறு கேட்டு நிறைவு செய்கின்றேன்.

**கௌரவ பதில் தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர்களின் வேண்டுகோள் எல்லாம் நியாயமான வேண்டுகோள்தான். ஆனால் சபை ஆரம்பித்த காலத்தில் இருந்து வீதிகளுக்கு பெயரிடுவது தொடர்பாக ஒவ்வொருவருக்கும் பணித்து பின்னர் உப தவிசாளராக வந்து கௌரவ தவிசாளர் அவர்களிடம் வேண்டிக்கொண்டது வீதி அபிவிருத்தியை என்னிடம் கையளியுங்கள் என்று, அதனை பாரமெடுத்து இன்னும் அது முற்றாக பூரணப்படுத்தப்படவில்லை. குறிப்பிட்ட ஒவ்வொரு வட்டாரத்திற்கும் தெரிவு செய்கின்ற போது அளவுகளோ அல்லது விளம்பர அமைப்புகளோ மாற்றம் அடையும். நகர்ப்புறத்தில் இருக்கின்றது போல் கிராமப்புரத்திலும் இருக்க வேண்டும். மல்வத்தை நூலகத்தை சென்று பார்த்தேன். அங்கு சிலர் இருக்கின்றார்கள் அவர்கள் வேலைகளை மனங்கொண்டு செய்கின்றார்கள் இல்லை. என்னைப் பொருத்தவரையில் இவ்வளவு காலமும் ஒரு மரத்தைகூட வளர்த்து காட்டுகின்ற அளவுக்கு இல்லை.

நான் அந்த நூலகத்தை திறப்பதற்கு முதல் சென்று பார்த்தேன். அதில் ஒரு ஆலமரம் விழுதுவிட்டு இறங்கிக் கொண்டு இருக்கின்றது. அது நிலத்தில் படும் என்றால் நாக மரத்தையே அழித்துவிடும். அதை அங்கு இருக்கின்ற சனசமூக நிலயத்திடம் 03 முறை அதை வெட்ட வேண்டும் என்று கூறியிருக்கின்றேன். அதற்கு நடவடிக்கை எடுக்கிறார்கள் இல்லை.அங்கு இருக்கின்ற வாசிகசாலை, வைத்தியசாலை, கோயில் எல்லாவற்றையும் சமமாக பார்க்க வேண்டும். கோயிலுக்கு மண் ஏற்றுகின்ற போது அவ் வாசிகசாலையில் 02 பெட்டி மண்ணை கொடுத்து விடுங்கள் என்று கூறினேன். ஆனால் ஒரு பெட்டி மண்கூட கொடுக்கவில்லை. கௌரவ முன்னாள் உப தவிசாளர் அவர்கள் எவ்வளவு சிரமப்பட்டு பணத்தைக் கொண்டு அபிவிருத்திகளை செய்கின்றார். இதை அங்கு இருக்கின்றவர்களுக்கு அவ் உணர்வை ஊட்ட வேண்டும். நான் வைத்த மரம் என்று கூறுகின்ற அளவுக்கு ஒருவருக்கும் அந்த ஆர்வம் இல்லை. நாங்கள் எல்லோரும் எல்லா இடத்திலும் இருக்க வேண்டும். குறைவை மட்டும் சுட்டிக்காட்டக்கூடாது நிறைவையும் சுட்டிக்காட்ட வேண்டும் என்று கூறி எனது உரையை முடித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.சீ.எம்.சஹீல் அவர்கள்:**
இன்றைய அமர்வுக்கு தலமை தாங்குகின்ற கௌரவ பதில் தவிசாளர் அவர்களே, எமது சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு நோயாளர்களை பார்வையிடுவதற்கு வருகை தருகின்றவர்கள் வாகனத் தரிப்பிடம் இல்லாமல் பல்வேறு அசௌகரியங்களை இன்று எதிர்நோக்குகின்றனர். அந்த அடிப்படையிலே வாகனத்தரிப்பிடத்திற்காக ஒரு இடத்தை ஒதுக்குவதற்காக எமது சபை முன்வர வேண்டும். அதே போன்று கடந்த 2 ½ வருடங்களாக எங்களுடைய முன்னாள் தவிசாளர் அவர்கள் செய்த பணிகள் அளப்பரியது. அதே போன்று எங்களுடைய புதிதாக வருகின்ற தவிசாளர் எங்களுடைய அனைத்து உறுப்பினர்களையும் ஒருங்கிணைத்து எங்களது வட்டாரங்களிலே எங்களுடைய பணிகளை தொடர்வதற்கான வாய்ப்புக்களை வழங்குவார் என்ற நம்பிக்கை உண்டு. அந்த அடிப்படையில் கடந்த அரசாங்கத்திலே எங்களுடைய பிரதேச அபிவிருத்தி குழுக்களிலே எங்களை மக்களினுடைய பிரதிநிதிகளாக நாங்கள் அவ் இடங்களுக்கு சென்று மக்களினுடைய குறைகளை பேசுவதற்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கவில்லை. ஆனாலும் தற்போதைய அரசாங்கத்தில் எங்களுடைய பிரதிநிதிகள் ஒவ்வொருவருக்கும் அவர்களுடைய மக்களின் பிரச்சினைகளை பேசுவதற்கு ஒரு வாய்ப்பை வழங்க வேண்டும் என்று இச் சந்தர்ப்பத்தை உருவாக்குவதற்காக எங்களுடைய சபையில் முன்வந்து தற்போதைய அரசாங்கத்தில் எமது வேலைகளை முடிக்க வேண்டும் என்று கூறி விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சென்ற சபையில் எமது முன்னாள் தவிசாளர் அவர்கள் திண்மக் கழிவு உத்தியோகத்தர்களோடு எங்களுடைய சபை உறுப்பினர்களை சந்திப்பது தொடர்பாக, அதை கட்டாயமாக தீர்மானம் எடுத்ததற்கு அமைவாக அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ பதில் தவிசாளர் அவர்களே, முதலில் நான் இதை கூறியிருக்க வேண்டும். எங்களது சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு முன்னாள் தவிசாளர் அவர்களின் உதவியோடும், இந்த சபை உறுப்பினர்களின் உதவியோடும் மாத்திரைப் பக்கட்கள் வழங்கியமைக்காக வைத்தியசாலை அத்தியட்சகர் உட்பட அனைவர் சார்பாகவும் நன்றியைக் கூறிக்கொண்டு, மீண்டும் அதற்கான Bench இனையும், Dustbin இனையும் தந்துதவ வேண்டும் என்றும் கேட்டு, இந்த இடத்திலே இந்த சபையிலே முன்னாள் தவிசாளர் அவர்கள் நாங்கள் எதிர்க்கட்சியில் அமர்ந்து இருந்தாலும் எங்களை எதிர்க்கட்சி என்று எதிர்நோக்காமல் ஒரு எதிரியாக நோக்கிப் பேசாமல் எங்களுக்கு நல்ல வகையில் இச் சபையில் வழிநடத்தியமைக்காகவும் இவ் இடத்தில் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். எதிர்காலத்தில் யார் தவிசாளராக இருந்தாலும் எங்களது உறுப்பினர்களின் சில வேண்டுகோள்களையும் உள்வாங்க வேண்டும் என்பதையும் இவ் இடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். ஏனென்றால் நான் அவசரமாக கூறியதனால் உங்களுக்கு விளங்கவில்லை. ஒரு Media இனை நாங்கள் உள் எடுப்பது என்றால் சபையில் உள்ள உறுப்பினர்களின் பிரேரணை முதலில் சமர்ப்பித்து அனுமதி பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

இந்த சட்டத்தை தெரியாமல் கேட்கவில்லை. அவ்வாறு இல்லை என்றால் எங்களுக்கும் அவசர கால பிரேரணை அறிக்கை ஒன்றை நாங்கள் சில உறுப்பினர்கள் ஒப்பமிட்டு அம் Media வை வெளியேற்றக்கூடிய தகுதியும் உறுப்பினர்களுக்கு இருக்கின்றது என்பதையும் இவ் இடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். Media என்பது பல இடத்திலும் பகிரப்படும் ஒன்றாகும். இவ்வளவு காலமும் முன்னாள் தவிசாளர் அவர்கள் இருந்த காலம் தொட்டு இம் Media வை அனுமதிக்கக் கூடாது என்று நீங்கள் எல்லோரும் வேண்டிக்கொண்டீர்கள். ஆனால் வெளியில் முன்மேசைகளில் அமர்ந்திருந்த உத்தியோகத்தரிடம் கூட அனுமதி இல்லாமல் Media உள் நுழைந்தது மிகவும் வெறுக்கத்தக்க ஒன்று என்பதை இவ் இடத்தில் கூறுகின்றேன். அதற்காக நான் பிரதித் தவிசாளர் அவர்களை அகௌரவப்படுத்த விரும்பவில்லை. கௌரவமாக கேட்டுக் கொள்கின்றேன் இனி இவ்வாறான Media க்கள் உள்வாங்கப்பட வேண்டும் என்றால் சபை உறுப்பினர்களின் தீர்மானத்தோடு உள்வாங்க வேண்டும் என்றும் இவ் இடத்தில் சுட்டிக்காட்டி விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் வீ.ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த கூட்டத் தீர்மானத்தின் மீளாய்வு அறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டிருக்கின்றது. உண்மையிலே கடந்த காலங்களில் இடம்பெற்ற கூட்டங்களுக்கு சமூகமளிக்கவில்லை. எனவே நான் இம் மீளாய்வு அறிக்கையை வாசித்ததில் மகிழ்ச்சி அடைகின்றேன். எதிர்காலங்களிலும் இம் மீளாய்வு கடைப்பிடிக்க வேண்டும் என்பதை கூறி நிறைவு செய்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் கே.எம்.இன்பவதி அவர்கள்:**
கௌரவ பதில் தவிசாளர் அவர்களே, நீங்கள் மல்வத்தை உப அலுவலகத்தைப் பற்றி கூறினீர்கள் அதனை உள்வாங்கியவளாக, நாங்கள் பல தடவைகள் சென்று பார்க்கின்ற போது அங்கு இருக்கின்ற ஊழியர்களினுடைய வேண்டுகோள். அவ் வளவினை பாதுகாப்பான வேலியை அமைத்து தருமாறு என்று, பல பலன் தரும் மரங்களை நாட்டினோம் ஆனால் அதனை பாதுகாக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது. தற்போது அங்கு பயர் விதைக்கப்பட்டிருக்கின்றது. பயரை ஒவ்வொரு நாளும் மாடுகள் உழவிக் கொண்டு இருக்கின்றது. எனவே நாம் பாதுகாப்பான வேலிகளை கொடுத்து அங்கு இருக்கின்ற ஊழியர்களை ஊக்கப்படுத்துவதன் மூலம்தான் இதனை வெற்றிகரமாக கொண்டு செல்ல முடியும். அத்தோடு சென்ற மாத அமர்வில் மல்வத்தையின் கடைகள் சம்மந்தமாக கூறினேன். அது இந்த மீளாய்வில் வரவில்லை. காரணம் தெரியவில்லை. ஏனென்றால் அந்தக் கடை உறங்கிய நிலையில் பல காலமாக உள்ளது. அதனையும் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ பதில் தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கழிவகற்றல் வாகனம் தொடர்பாக, அதற்கு Dumping பிரதேசம் இல்லாமல் இருக்கின்றது. இச் சந்தர்ப்பத்தில் அதையும் பார்த்துக்கொண்டால் அது நல்ல வருமானம். நாம் சென்ற முறையும் முயற்சி எடுத்தோம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கழிவகற்றல் கரையோரங்களில் பாரிய பிரச்சினை. இவ் வருடத்திற்குள் நாம் அந்த வசதியை ஏற்படுத்தலாம் என்ற முயற்சி எடுத்தோம். ஆனால் துரதிஸ்டவசமாக இறுதி நேரத்தில் அது கை கூடவில்லை. சென்ற மாதம்கூட முயற்சி எடுத்தோம். இனி வருகின்ற மாரியில்தான் இதன் முக்கியத்துவம் உணரப்படும். கலிசகர் எம்மிடம் இருக்கின்றது. அதன் பம் Repair இற்கு சென்றுள்ளது. அது 02 கிழமையால் வரும் என்று நினைக்கின்றேன். ஆனால் அதை கொண்டு கொட்டுவதற்குரிய இடம் இல்லை. இந்த சபையின் நிதி நிலமையை ஆழமாக பார்த்து அதை எமது Compost Yard இல் ஆரம்பிப்பதற்கு ஒரு முயற்சி எடுப்போமானால் வருகின்ற காலங்களில் உதவியாக இருக்கும். நான் நினைக்கின்றேன் 4 மில்லியனுடன் ஆரம்பிக்கலாம். இதில் வருமானம் மட்டுமல்ல அது பெரிய ஒரு சேவை. தற்போது சன நெரிசலினாலும் மாறியும் வந்தால் நில நீர் உயர்ந்து இருப்பதனால் பாரிய ஒரு பிரச்சினை. இதை ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

**தீர்மானம் - 04/30/10**

மலசலகூட கழிவுகளை அகற்றுவதற்கு தேவையான (Night Solid) வசதிகளை ஏற்படுத்துவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.யூசுப் லெப்பை |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, எமது முன்னாள் தவிசாளர் அவர்கள் இப் பதவியை இராஜினாமா செய்தவுடன் நான் அவரிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கேட்டேன். ஏன் சேர் இப் பதவியை இராஜினாமா செய்தீர்கள் என்று, ஏனென்றால் மிகவும் வேதனைக்குரிய விடயம். எமது சம்மாந்துறை பிரதேசம் ஒட்டுமொத்த அம்பாரையில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக இருந்தது. எந்தவிதமான பிரச்சினைகள் இல்லாமல் நல்ல முறையில் சென்றது. அப்படியான பேசுபொருளாக இருந்தது. அது மாறாமல் இருக்க வேண்டும் என்று எனது வேண்டுகோளை முன்வைத்தவளாகவும், மற்றும் ஒவ்வொரு நூலகங்களுக்கும் புத்தகங்கள் கொள்வனவு செய்வதற்கான ஒரு முன்மொழிவு வந்துள்ளது. அதில் குறிப்பாக கல்லரிச்சல் நூலகத்தை பொருத்தவரையில் அப் பிரதேசத்தில் இருக்கின்ற பிள்ளைகள் மிகவும் போக்குவரத்து வசதிகள் இல்லாமல் அசௌகரியமான நிலையில் இருக்கின்ற ஒரு காரணத்தினால் அங்கு கஸ்ஸாலி வித்தியாலயம், ஏத்தாள குள பாடசாலை என்று 02 பாடசாலைகள் இருக்கின்றது. அதை உள்வாங்கி அந்த நூலகத்திற்கு முக்கியமான புத்தகங்களை வழங்குமாறு மிகவும் தாழ்மையாக கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, நீங்கள் அமுல்நடத்த இருக்கின்ற செயற்திட்டங்களை அவசர அவசரமாக செய்து முடிக்குமாறும் மற்றும் எமது சபையினால் தீர்மானிக்கப்பட்ட சில தீர்மானங்களையும், எமது சபையில் இருக்கின்ற ஏனைய முன்மொழிவுகளுக்குரிய தீர்மானங்களை அவசரமாக செய்து முடிக்குமாறும் மற்றும் நீங்கள் கூறினீர்கள் தற்போது ஓய்வு பெற்ற நிலையில் இருக்கின்றேன் என்று, எனவே இதனை முழுப்பொறுப்புடன் இருந்து அவசரமாக செய்து முடிக்குமாறும் சபையோர் சார்பாக உங்களை பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**

கௌரவ பதில் தவிசாளர் அவர்களே, சம்மாந்துறை பிரதேச சபையினால் செலவு செய்யப்படுகின்ற நிதி ஏறத்தாள மக்களுக்கு பிரயோசனமளிக்கக் கூடிய வகையில் நாங்கள் ஏதோ ஒரு வகையில் செலவளிக்க வேண்டும். என்னைப் பொருத்தவரைக்கும் வைத்தியசாலைக்காக இச் சபையில் இருந்து நிதி செலவீடு செய்வது என்பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனென்றால் வைத்தியசாலைக்கு என்று இந்த நாட்டிலே அங்கீகரிக்கப்பட்ட ஒரு அமைச்சரவை அந்தஸ்த்து உள்ள அமைச்சு இருக்கின்றது. அதன் ஊடாக பல்வேறுபட்ட சுகாதார திணைக்களங்கள் இருக்கின்றது. சுகாதார துறைக்காக உதவி செய்யக்கூடிய பல்வேறுபட்ட தனியார் தொண்டர்களும், வெளிநாட்டு நிறுவனங்கள் எல்லாம் இருக்கும் போது எமது ஊரிலே இந்த சபையினால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய தேவைகள் எண்ணிக்கொண்டே போகலாம். அவ்வாறு இருக்கின்ற போது இந்த சபையில் இருக்கின்ற நிதியினை சுகாதார திணைக்களங்களுடைய தேவைகளுக்காக செலவீடு செய்வதை மட்டுப்படுத்திக் கொண்டால் நல்லம் என்பதை நான் இச்சபையில் கூறிக்கொள்வதோடு,

கௌரவ உறுப்பினர் சரீபா அவர்களினால் முன்வைக்கப்பட்ட கடந்த வருடம் எமது வரவு செலவு திட்டத்திற்கமைவாக கிராமிய பெண்கள் வலுவூட்டல் நிகழ்ச்சித் திட்டத்தில் ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் தலா ஒரு இலட்சம் பணம் ஒதுக்கப்பட்டது. இன்றும் சகல உறுப்பினர்களும் வேண்டிக் கொண்டதற்கமைய 2020 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்திலே நாம் அதற்கான

ஒதுக்கீடு செய்துள்ளோம். அப் பணத்தினை இருக்கின்ற இக் கால எல்லைக்குள் தந்துதவினால் நல்லம் என்பதை கேட்டுக் கொண்டு, இதில் எந்த உறுப்பினர்களும் சலனங்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டாம். ஏனென்றால் சபையினுடைய நிதிகள் பங்கீடு செய்யப்படுகின்ற போது ஒரு வரையறை இருக்க வேண்டும். உண்மையாக தேவை கூடிய பிரதேசமும் இருக்கின்றது. தேவைகள் குறைந்த பிரதேசங்களும் இருக்கின்றது.

என்னைப்பொருத்தவரைக்கும் தைக்காப்பள்ளி வட்டாரத்திலே கௌரவ உறுப்பினர் 04 பேர் இருக்கின்றார்கள். சம்மாந்துறை வட்டாரத்திலே கௌரவ உறுப்பினர் 03 பேர் இருக்கின்றார்கள். மட்டக்களப்புத்தரவை வட்டாரத்திலே கௌரவ உறுப்பினர் 02 பேர் இருக்கின்றார்கள். வீரமுனை வட்டாரத்திலே கௌரவ உறுப்பினர் 03 பேர் இருக்கின்றார்கள். மல்வத்தை வட்டாரத்திலே கௌரவ உறுப்பினர் 02 பேர் இருக்கின்றார்கள். ஆனால் இவை எல்லாவற்றையையும் விட தேவை கூடிய 02 வட்டாரங்கள் இருக்கின்றது. ஒன்று வளத்தாப்பிட்டி வட்டாரம், இரண்டாவது மல்காம்பிட்டி வட்டாரம். சபை நிதிகளை ஒதுக்கீடு செய்யும் போது உறுப்பினர்கள் என்று இல்லாமல் பிரதேசங்களை கவனத்தில் கொண்டு நிதியை ஒதுக்கீடு செய்யுமாறு கௌரவ தவிசாளர் மற்றும் கௌரவ உறுப்பினர்கள் அனைவரையும் மிக விணயமாக வேண்டியவனாக விடைபெறுகின்றேன்.

**கௌரவ பதில் தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
எமது முன்னாள் தவிசாளர் அவர்கள் இராஜினாமா செய்ததை தொடர்ந்து இன்று நான் வைத்த கோரிக்கைகள் இனி அடுத்து வரப்போகின்ற தவிசாளரும் பின்தொடர வேண்டும். நாங்கள் எல்லோரும் சபைக்கு ஒத்துழைப்பாக இருக்க வேண்டும் என்பதற்காக முன்வைத்துள்ளேன். இரு வாரங்களுக்குள் நிரந்தர வர்த்தமானி மூலம் ஒரு தவிசாளர் வருவார். நாங்கள் உறுதியாக இருந்தால் எந்த தவிசாளர் வந்தாலும் இந்த கோரிக்கையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதுதான் நான் இந்த சபையில் இருக்கின்ற உங்களுக்கு தருகின்ற உத்தரவாதம்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் நளீம் அவர்கள் பேசியதை உள்வாங்கியவளாக, சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை சரித்திரம் பற்றி ஏற்கனவே ஒரு முறை கூறியிருக்கின்றேன். இவ் வைத்தியசாலை தரம் உயர்த்தப்படுவதில் ஒரு சிக்கலை உள்வாங்கிக் கொண்டிருக்கின்றது மறைமுகமான இடத்தில். சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை தரம் உயர்த்தப்பட வேண்டிய நிலையில் நிந்தவூருக்கு அந்த தரமுயர்த்தல் வேண்டும் என்றும், அட்டாளைச்சேனைக்கு வேண்டும் என்றும் ஒரு சங்கடமான நிலையில் இந்த ஆதார வைத்தியசாலை இருந்து கொண்டிருக்கின்றது. இதற்கு முதற்கண்ணாக வரவு அத்தாட்சிகள் கூடுதலாக இருக்க வேண்டும் என்றதை ஒரு எடுகோளாக ஆளுநர் அவர்கள் ஏற்கனவே இருந்தவர் திணிக்கப்பட்டிருந்தார். சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை தரம் உயர்த்துவதற்கு மக்கள் வருகையும் கூடுதலாக வேண்டும். அதற்காக மக்களுக்கான சௌகரியமான இடங்களையும், சௌகரியமான பொருட்களையும் பெற்றுக் கொள்வதற்கு இது மத்திய அரசாங்கத்தில் இல்லை. மாகாண சபையில் இருப்பதால் எத்தனையோ பல கடிதங்கள் கொடுத்து எத்தனையோ அறிக்கைகள் இட்ட பின்னர் 02 வருடம், 03 வருடத்திற்கு பின்னர்தான் ஒரு சிறிய தொகை வருகின்றது. அந்த தொகையை வைத்து எல்லாமே செய்ய முடியாது.

எமது சம்மாந்துறையைச் சேர்ந்த புத்திஜீவிகள், சில வர்த்தகர்களின் உதவியினால்தான் இன்றைக்கு சம்மாந்துறையில் சில வேலைகள் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றது. எனவே எமது ஊரை முன்னேற்ற வேண்டும் என்றும் இந்த சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையை முன்னேற்றமடையச் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் இவ்வாறான சில உதவிகளை இந்த சபை ஊடாக கேட்டுக் கொள்கின்றார்கள். இது நாங்கள் செய்வது எங்களுடைய சபையில் இருந்த ஆதாரத்திற்கும், சம்மாந்துறையில் செய்த உதவியுமாகத்தான் தெரிய வேண்டும் என்று, இல்லையென்றால் வற்புறுத்தி சபை ஊடாக கேட்பதற்கு விரும்பவில்லை. நீங்கள் எல்லோரும் நினைத்தால் எங்களது சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையும் உயர்த்தப்பட வேண்டும். அதற்கான ஒத்துழைப்பு வழங்கப்பட வேண்டும் என்று நினைத்தால் மட்டுமே தவிர என்னுடைய தனிபட்ட ரீதியாகவோ அல்லது வைத்திய அத்தியட்சகரின் தனிப்பட்ட ரீதியாகவோ நான் இங்கு

எந்தப் பிரேரணையும் முன்வைக்கவில்லை. இதற்கு பின் இதைப்பற்றி விசாரித்தால் உங்களுக்கு விளங்கும் இந்த சம்மாந்துறையில் தற்போது வந்திருக்கின்ற வைத்திய அத்தியட்சகரின் பல முயற்சியினால் அவர் தான் மட்டும் செய்ய வேண்டும் என்று இல்லாமல் மற்றவர்களையும் அழைத்து எல்லா உறுப்பினர்களையும் அழைத்து இந்த உதவியை கேட்டு வைத்தியசாலையை உயர்த்த வேண்டும் என்ற எண்ணத்திற்காக வேண்டித்தான் இந்த இடத்தில் சில பொருட்களை கேட்கின்றேன். எனவே இதில் ஏதாவது நான் தவறுதலாக கேட்டிருந்தால் அல்லது பிழையாக கேட்டிருந்தால் சபை ஊடாக மன்னிப்பு கேட்கின்றேன்.

**கௌரவ பதில் தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
இது புரிதலும் அறிதலும் தான் இங்கு இருக்கின்ற பிரச்சினை. அவர் எம்மிடம் இருக்கின்ற நிதி வளத்தினைப் பற்றி பேசினார். உங்களுக்கு உதவக் கூடாது என்று சொல்லவில்லை. சபையின் அமர்வினை இனிதே முடித்துக் கொள்கின்றேன்.

AM.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை.

AM.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை.